பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 05 வியாழக்கிழமை (17.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 143

# கிழக்கில் தேர்தல் முடிந்ததும் வடக்கில் உயர் நிர்வாகக் குழு!

## புலிகளிடமிருந்து முற்றாக மீட்கும் வரை அதுவே இயங்கும்

கொழும்பு,ஏப்ரல்17

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த கையோடு உடனடியாக - வடக்கின் நிர்வாகத்திற்கென உயர்மட்ட ஆலோசனைக் குழுவொன்றை அரசு நியமிக்கவுள்ளது.

அரச தகவல் திணைக்களம் நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 10ஆம் திகதி கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்ற பின்னர், இலங்கையில் அதிகார பகிர்விற்கான அனைத்துக் கட்சிக் குழு பரிந்துரைத்தமைக்கு இணங்க, உயர்மட்ட ஆலோசனைக்குழுவொன்றை அரசு வட மாகாண நிர்வாகத்துக்கு நியமிக்கும் என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் வடமாகாணத்தை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்கும்வரை குறிப்பிட்ட உயர்மட்ட ஆலோசனைக்குழு செயற்படும் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர், இதன்மூலம் வடமாகாணத்தின் உள்ளூராட்சி, மாகாணசபைத் தேர்தல்களை நடத்தி ஜனநாயகத்தை முழுமையாக அமுல்படுத்தலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மோதல்கள் தொடருகின்றன

வவுனியா,ஏப்.17

வடக்குப் போர்முனைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் இரு படையினர் உயிரிழந்தனர் என்றும் 16 பேர் படுகாயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணலாறு, ஆண்டான்குளம், கிரிபன்வேவப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.50 மணியளவில் இடம்பெற்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜோன் செனிவிரத்னவுக்கு பிரதம கொறடா பதவி?

கொழும்பு, ஏப்.17

ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் மறைவினால் ஏற்பட்டுள்ள பிரதம கொறடா பதவிக்கு இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சருமான ஜோன் செனிவிரத்ன நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

சட்டத்தரணியான அமைச்சர் ஜோன் (12ஆம் பக்கம் பார்க்க)

## ராஜித சேனாரத்ன தலைமையிலான குழு நோர்வேயில் சொல்ஹெய்முடன் பேச்சு

கொழும்பு,ஏப்.17

நிர்மாண மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தலைமையிலான இலங்கைத் தூதுக்குழு ஒன்று நோர்வே சென்று அந்நாட்டு சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மை சந்தித்துப் பேச்சுகளை நடத்தியுள்ளதாக இணையதளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பேச்சுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும் மற்றும் மன்னாரிலும் இடம்பெற்றுவரும் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் -

மேலும் அந்தப் பகுதிகளில் இனந்தெரியாத ஆயுதக்குழுக்களுடன் தொடர்புடையோர் மேற்கொள்ளும் சட்டத்துக்கு முரணான கொலைகள் உட்படப் பல விடயங்கள் தொடர்பாகவும் - இந்தப் பேச்சுகளின் போது கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சில் (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரியங்காவைச் சந்தித்ததால் பாவங்கள் கழுவப்பட்டுவிட்டன சொந்த விருப்பத்திலேயே நளினியைச் சென்று பார்த்தேன்





சென்னை,ஏப்.17

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் மகள் பிரியங்கா தன்னை வந்து சந்தித்ததன் மூலம் தனது பாவங்கள் கழுவப்பட்டுவிட்டன என நளினி கூறியுள்ளார். இது குறித்து அவர் தனது சகோதரருக்குத் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இச்சந்திப்பின்போது ஒரு கட்டத்தில் அடக்கமுடியாமல் கண்ணீர் விட்டு பிரியங்கா அழுதார். அவர் கேட்ட பல கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் நானும் மௌனத்தாலும் கண்ணீராலும் பதிலளித்தேன். இந்தச் சந்திப்பின் மூலம் பிரியங்கா என்னை மன்னித்துவிட்டார் என்றே உணருகின்றேன். அவரது வருகை ராஜீவ் காந்தி குடும்பத்தின்மீது நாம் வைத்திருந்த மரியாதையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது - என்றார்.

இச்சந்திப்புக் குறித்து நளினியின் சட்டத்தரணி துரைசாமி கூறியவை வருமாறு:-

நளினி எம்.ஏ. பட்டம் பெற்றவர். சரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவர். அதனால் அவருக்கும் பிரியங்காவுக்கும் இடையில் ஒருமணி நேரம் ஆங்கிலத்தில் உரையாடல்கள் இடம்பெற்றன. ஆனால் இந்த உரையாடல்களின் போது சிறையில் இருந்து தாம் விடுதலை ஆவதற்கு உதவி செய்யும்படி பிரியங்காவிடம் நளினி கேட்கவில்லை.

அப்படி ஏன் கேட்கவில்லை என்று நான் நளினியிடம் கேட்டதற்கு -

பெரிய மனிதர்கள் என்னைப் பார்க்க வரு[illegible]றார்கள். அவர்களிடம் உதவி கேட்பதற்கு மனது இடம் கொடுக்கவில்லை - என்றார்.

அதுபோன்று சிறையில் இருந்து வெளியே வருவதற்கு உதவுவேன் என்று (12ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள்களின் விலைகள் மீண்டும் மாத இறுதியில் உயரும் சாத்தியம்

கொழும்பு,ஏப்.17

இம்மாத இறுதியில் எரிபொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படலாம் எனப் பெற்றோலியத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியை மேற்கோள்காட்டி இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் மாத ஆரம்பத்தில் எரிபொருள்களின் விலையை நாங்கள் உயர்த்தி இருந்தால் புதுவருடக் கொண்டாட்டத்துக்கு முதல் அனைத்துப் பொருள்களின் விலைகளும் அதிகரித்திருக்கும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர், இதன் காரணமாகவே ஏப்ரலுக்குப் பின்னர் விலைகளை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஏப்ரல் 15 ஆம் திகதி வரை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் (12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் அரிசி வகைகளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

### சம்பா - ரூ.70, நாட்டரிசி, சிவப்பு அரிசி - ரூ.65

கொழும்பு, ஏப்.17

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலைகள் (உச்ச விலைகள்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ள புதிய விலைகள் தொடர்பாக விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தக, வாணிப அமைச்சர் பந்துல குணவர்த்தன இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுமாலை தகவல் திணைக்களத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## உச்சாணிக்கு உயரும் மசகு எண்ணெய் விலை

கொழும்பு,ஏப்17

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதி உச்சத்துக்கு உயர்ந்து வருகின்றது.

நியூயோர்க் சந்தையில் நேற்று ஒரு பீப்பா மசகு எண்ணெய்யின் விலை 114.5 டொலர்கள் என்ற மட்டத்தை அடைந்திருந்தது.

இது எண்ணெய் விற்பனை வரலாற்றில் எய்தப்பட்ட அதி கூடிய விலை என்று பொருளாதார விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை, முத்தையன்கட்டில் நேற்று விமானத் தாக்குதல்கள்

கொழும்பு,ஏப்.17

வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விமானப்படையின் எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்களும் ஜெற் விமானங்களும் தாக்குதல் நடததி உள்ளன.

முகமாலைப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் பதுங்குகுழிகள் மற்றும் மோட்டார் தளங்களை இலக்குவைத்து நேற்றுக்காலை 6.15 மணியளவில் விமானப் படையினரின் எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல்களை நடத்தின என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று முன்தினம் முல்லைத்தீவு ஒட்டுசுட்டானுக்கு வடமேற்கே (12ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பற்றாக்குறையுள்ள நாடுகளின் வரிசையில் இலங்கை

ஜெனீவா,ஏப்.17

உணவுப் பொருள்களுக்கான விலையேற்றம் மற்றும் உணவுத் தட்டுப்பாடு என்பவற்றினால் பாதிக்கப்பட்ட மிக மோசமான நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இணை நிறுவனமான உணவு விவசாய நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் (12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்





தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட வசந்த விழாவில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. போர்த்தேங்காய் உடைத்தல் வலுப்போட்டி மற்றும் தயிர் முட்டி உடைத்தல் ஆகியன இடம்டபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:நேசன்)

# யுத்தத்தைவிட சர்வதேச விலை அதிகரிப்பால் ஏற்பட்ட தாக்கமே இலங்கைக்கு மிக அதிகம்

## விலையேற்றம் அரசுக்கு அப்பாற்பட்டது என்கிறார் மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஏப்.17

சர்வதேச ரீதியில் உணவு மற்றும் எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் உள்நாட்டு யுத்தம் ஏற்படுத்திய தாக்கத்தை விட அதிகம்.

இப்படி மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

எனினும் இவ்வருடம் இலங்கை ஏழு சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டுவது சாத்தியமில்லை என்று தெரிவிக்கப்படுதை அவர் நிராகரித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட கிழக்கில் முன்னெடுக்கப்படும் பொருளாதார நடவடிக்கைகள் ஏழு சதவீத பொருளாதார வளர்ச்சியை சாத்தியமாக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**கிழக்கு சாத்தியமாக்கும்**

இவ்வருட பொருளாதார வளர்ச்சி ஏழு சத வீதமாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள இலங்கை வங்கியின் ஆளுநர், எண்ணெய் விலை, உணவு விலை அதிகரிக்காத பட்சத்தில் உள்நாட்டு யுத்தத்தின் மத்தியிலும் 8 சதவீத பொருளாதார வளர்ச்சி சாத்தியமே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தை விட எண்ணெய் மற்றும் உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பே பொருளாதார வளர்ச்சியைக் குறைத்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**கிழக்கின் பொருளாதார வளர்ச்சிக்கு தாக்கத்தை குறைக்கும் வாய்ப்பு**

கிழக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீத அதிகரிப்பை ஏற்படுத்தும். விவசாயத்துறை, மீன்பிடித்துறை மூலமும் திருகோணமலையில் அனல் மின் நிலையத்தை ஏற்படுத்துவதன் மூலமும் இது சாத்தியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் எண்ணெய் விலைகள் குறைவடைந்தால் இலங்கையின் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் எனவும் அஜித் கப்ரால் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வருடத்தின் நான்காவது மாதமே தற்போது நடைபெறுகின்றது. எண்ணெய் விலை குறைவடையுமென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அது இடம்பெற்றால் பணவீக்கத்தைக் குறைக்கலாம்.

இல்லையேல் நிலைமை கடினமாக விளங்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**விலையேற்றம் அரசுக்கு அப்பாற்பட்டது**

உணவுப் பொருள்களின் விலைகள் தற்போதைய அளவில் தொடர்ந்தும் காணப்பட்டால் பணவீக்கம் எவ்வாறு காணப்படும் என்பது குறித்து எதுவும் கூற மறுத்துள்ள மத்திய வங்கி ஆளுநர் உணவுப் பொருள்கள் விலை அதிகரிப்பு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயமாகக் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி நாணய விநியோகம் மூலம் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முயல்கின்றது. உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி இலங்கையையும் ஓரளவு பாதித்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு முதலீடு கடந்த வருடம் மிக உயர்ந்து காணப்பட்டது. யுத்தநிறுத்த உடன்படிக்கை முறிவடைந்தமை மற்றும் மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகள் குறித்து முதலீட்டாளர்கள் அதிக அக்கறை கொள்ளவில்லை - என்றும் ஆளுநர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)

## தென்மராட்சியில் குடும்ப விவரங்களைப் பொலீஸார் திரட்டுகின்றனர்

யாழ்ப்பாணம்,ஏப்.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களின் விவரங்களையும் பொலீஸார் கிராம அலவலர்கள் மூலம் திரட்டி வருகின்றனர்.

குடும்பத் தலைவர்கள் தமது குடும்ப அட்டையுடன் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் சென்று விவரங்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இனி வரும் காலங்களில் பொலீஸாரிடம் 'கிளியரன்ஸ்' பெறுவதற்கு இப்படிவம் அவசியமென சுட்டிக்காட்டுப் பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் உரிய படிவங்களைப் கிராம அலுவரிடம் பெற்று பூர்த்தி செய்து வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## செயலகத்தில் சனியன்று வினைத்திறமை காண் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். மாவட்டத்தில் விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சால் 2005ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டு கடமையாற்றும் பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சை கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி நடத்தப்படவிருந்தது. பின்னர் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

## தரம் 11 பாட நூல்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஏப்.17

தரம் 11 மாணவர்களுக்காகான பாட நூல்கள் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவை அடுத்த வாரம் பாடசாலைகள் ஊடாக மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் கப்பலில் கொண்டுவரப்பட்ட பாடநூல் தொகுதிகள் யாழ்ப் பாணம் கொண்டு வரப்பட்டு வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(1-207)

## பிரேமை என்கிற அன்பு



*வாழ்க்கையின் முக்கியத்துவமே பிரேமை என்கிற அன்புதான். அது இல்லா விடில் தாய்க்கும், சேய்க்கும் இடையில், கணவனுக்கும் மனைவிக்கும் இடையில், நண்பர்களுக்கு இடையில் அன்பு என்பதே இராது. அன்பு, மனிதனை மனித் தன்மையிலிருந்து தெய்வத்துவத்துக்கு உயர்த்துகிறது. மனிதன் இப்போது அன்பை உற்றார், உறவினர், தனது உடைமைகள் இவற்றில் மட்டுமே செலுத்தி அதைக் குறுகிய தாக்குகிறான். அனைத்து மக்களையும் அரவணைக்கும் வகையில் அன்பை விரிவடையச் செய்ய வேண்டும். இதய நாற்காலியில் அன்பு மட்டுமே அமர்ந்துகொண்டால், அங்கு பொறாமையோ, வெறுப்போ ஏனைய தீய எண்ணங்களோ குடிகொள்ள இடமிராது.*

**சாயி சிந்தனை**

## போயாதின நிகழ்வுகள்

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தினர் நடத்தும் போயா ஆன்மீக நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை இராமநாதன் வீதியில் உள்ள சாயி நிலையத்தில் காலை 5.15 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (202)


கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பு

DLF Twenty 20

இந்தியன் பிரிமியர் லீக் தொடர்

18/04/2008 ஆரம்பம்

DISH TV மூலம் வித்தியாசமான அனுபவத்தை பெறுங்கள்

மிகக் குறைந்த விலையில் DISH TV Decorder கள் கிடைக்கும்.

DISH TV இற்குரிய கட்டணங்களை உடன் செலுத்தி ஒரு மணி நேரத்தினுள் Activation செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:SATS-TECH ENGINEER'S.

இல.182,கே.கே.எஸ்.வீதி, குளப்பிட்டி சேச் அருகாமை, கொக்குவில். தொ.பேசி:021 222 5908

Hot Line:- 0777 710785

Email:- satstech.india@yahoo.co.in




## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு .வரதராஜன் அவர்களின் அன்புத் தாயார்

**பாறுபதி இராசையா**

அவர்கள் (15.04.2008) காலமான செய்தியை கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,
வதிரி, கரவெட்டி

(B)

## வங்கியில் தவறவிடப்பட்ட பணம்

2008.04.15 செவ்வாய் முற்பகல் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி வாடிக்கையாளர் பகுதியில் இரண்டாயிரம் ரூபா தாள்கள் ஐந்து (ரூபா 10,000/=) தவறவிடப்பட்டுள்ளன. பணத்தைக் கண்டெடுத்தவர்கள் வங்கி முகாமையாளரிடம் கையளிக்குமிடத்து தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தவறவிடப்பட்ட பணத்தை கண்டு பிடிப்பதற்கு முயற்சி செய்த முகாமையாளர், பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் சக பணியாளர்கள் அனைவருக்கும் என்றும் நன்றியுடையவனாவேன்.

தகவல்:
வங்கி வாடிக்கையாளர்

(C)

## மரண அறிவித்தல்கள்

### கனகரத்தினம் செல்வராஜா



(மஞ்சத்தடி, இணுவில்)

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி, கோவில் வீதி, இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் செல்வராஜா நேற்று (16.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், கதிராசிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற பேபி சரோஜாவின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம் (கனடா), யோகராசா (கனடா), ஆனந்தராஜா (ஆங்கில ஆசிரியர், கொழும்பு), அமரர் யோகசுந்தரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவச்சந்திரன் (கனடா), சந்திரமோகன், சந்திரகலா (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயலட்சுமி (கனடா), அனுசியா, வசந்தபாலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமானாரும், சாணுகா, சந்தோஷ், சஞ்சாய், மயூரி, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (17.04.2008) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்திரமோகன் (பாபுஜீ -மகன், மினிபஸ் சாரதி, சங்கானை),
சிவலிங்கமூர்த்தி வனஜா (வனசி - மைத்துனி)

*மஞ்சத்தடி,*
*இணுவில்.*

(D)

### சிவப்பிரகாசம் கந்தசாமி

கோப்பாய் வடக்கு, இலகடியைப் பிறப்பிடமாகவும் அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரசாகம் கந்தசாமி நேற்று(16.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவரான அருணாசலம் மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் றொசாந்தன்(கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி O/L மாணவன்) , சபிதா(கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய தரம் 8 மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலநாயகி, பத்மநாதன், புவனேந்திரன், உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருட்சோதி, அருள்மணி, அருள்தேவி, தெய்வேந்திரம், அருள்யோகம், பரமேஸ்வரன், கமலினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.04.2008) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் கீழ்க்காணும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலகடி, கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
மகன்

(E)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான பொருளாதார உதவியை கணிசமான அளவு குறைத்தது அமெரிக்கா

## யுத்தம் கடினமானது என்று புலிகளுக்குப் புலப்படுத்தவே கடற்படைக்கு உதவி

கொழும்பு, ஏப்.17

இலங்கையின் கிழக்குப் பகுதியில் முன்னெடுக்கப்படும் பொருளாதார நடவடிக்கைகளில் அமெரிக்கா பங்கெடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ள அந்த நாட்டின் 2009ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு செயற்பாட்டு நிதித்திட்ட அறிக்கை, அதேவேளை இலங்கைக்கான ஒட்டு மொத்த பொருளாதார உதவியை வாஷிங்டன் பெருமளவுக்கு குறைத்துள்ளதையும் வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட அறிக்கை கடந்த வாரம் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீஸா ரைஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை மற்றும் பாதுகாப்பு நிலைவரங்களில் முன்னேற்றம் ஏற்படும் வரை அமெரிக்காவில் மிலேனியம் உதவித் திட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டதை இந்த நிதியறிக்கை உறுதி செய்துள்ளது.

**கிழக்கு விடுவிக்கப்பட்டமையின் விளைவு**

இலங்கையில் 2007இல் கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டமை, அங்கு மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி, அதிகார பன்முகப்படுத்தல், மற்றும் வறுமைக்கு முடிவு காணுதல், தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு - குறிப்பாக கிழக்கில் - முக்கிய ஜனநாயக பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவை சமாதானத்துக்கான ஆதரவை வலுப்படுத்தும். அதேசமயம், கடும்போக்குவாதிகளின் கருத்துகளை பலவீனப்படுத்தவும் உதவும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கான உதவிகள் பெருமளவுக்கு குறைக்கப்பட்டுள்ளமையையும் இந்த நிதி அறிக்கை புலப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு 2009ஆம் நிதியாண்டில் ஒட்டு மொத்த பொருளாதார உதவியாக 65 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க வேண்டுமென அமெரிக்க வெளிவிவகார அமைச்சு பரிந்துரை செய்துள்ளது. 2008 இல் பொருளாதார உதவி சுமார் 74 லட்சம் அமெரிக்க டொலராகவும் 2007இல் ஒட்டு மொத்த பொருளாதார உதவி 231 லட்சம் அமெரிக்க டொலராகவும் காணப்பட்டது.

இலங்கையில் சமாதானம் மற்றும் பாதுகாப்புக்காக அமெரிக்கா 2009இல் 29 லட்சம் டொலர்களை ஒதுக்கியுள்ளது. 2008 இல் இது 27 லட்சம் டொலராகவும், 2007 இல் 40 லட்சம் டொலராகவும் காணப்பட்டது.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான நிதியுதவி 2008 இல் சுமார் ஒன்பது லட்சம் டொலராக காணப்பட்டது. எனினும் 2009இல் இரண்டு லட்சம் டொலராகியுள்ளது.

இலங்கை தனது வரலாற்றின் முக்கியமான காலகட்டத்தில் உள்ளது. அமெரிக்காவின் உதவி, மோதலில் ஈடுபட்டுள்ளவர்களை பேச்சுக்கு கொண்டு வர உதவலாம். அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் உதவியுடனான செயற்பாடுகள் ஸ்திரப்படுத்தும் மற்றும் பாதுகாப்பு சீர்திருத்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் செயற்பாடுகள் இராணுவப் பயிற்சி, கடற்படையின் திறனை அதிகரித்தல், தகவல் தொடர்பு மற்றும் கண்காணிப்புக்கான சாதனங்களுக்கு நிதி வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கி காணப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**யுத்தம் கடினமானது என்பதனைப் புலப்படுத்தவே கடற்படைக்கு உதவி**

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் நிதி இலங்கை கடற்படையின் பலத்தை மேலும் அதிகரிப்பதன் மூலம் யுத்தம் கடினமானது என்பதை விடுதலைப் புலிகளுக்கு புலப்படுத்துவதை நோக்கமாக கொண்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் சமமாக பிரிக்கப்படுவதே இலங்கையில் நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கும். கடந்த 20 வருடங்களில் தொடர்ச்சியான சாதகமான பொருளாதார வளர்ச்சி காணப்பட்டுள்ள போதிலும் இலங்கையின் பெருமளவு மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர். இதற்கு பொருளாதார வளர்ச்சி மேல் மாகாணத்துக்குள் குவிக்கப்பட்டதே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகள் பின் தங்கியுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.(உ)

# தொலைக்காட்சிகள் அன்பளிப்பு

கோப்பாய், ஏப் 17

கோப்பாய் பிரதேச வைத்தியசாலை நோயாளர்கள் நலன்புரி சேவைக்கென கோப்பாய் வடக்கு, மத்தி பொது அமைப்புக்கள் சார்பாக இரண்டு தெலைக்காட்சிப் பெட்டிகள், டிஸ் அன்ரனா என்பன வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் உலக விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும்நோயாழிகளின் பொழுது போக்கிற்க்குவழி ஏற்பாட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-72)

# செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை ஆசிரியாகள் ஆகியோருக்கான வலய நிலைக் கல்வி மேம்பாடு தெடர்பான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

# ஒகேனக்கல் குடி தண்ணீர் திட்டப் பிரச்சினையில் தமிழக மக்களின் உரிமையை விட்டுக்கொடோம்

## மத்திய இணை அமைச்சர் வாசன் சொல்கிறார்

மதுரை, ஏப்ரல் 17

"அண்டை மாநிலங்களுடன் நட்புறவுடன், சுமுக நிலையைக் கடைப்பிடிக்கும் அதேசமயம், ஒகேனக்கல் கூட்டுக்குடி தண்ணீர்ப் பிரச்சினையில் தமிழக மக்களின் உரிமையை எந்த நிலையிலும், யாருக்காகவும் விட்டுத் தரமாட்டோம்."

- இவ்வாறு மத்திய திட்ட அமுலாக்கம் மற்றும் புள்ளியியல் துறை இணையமைச்சர் வாசன் கூறினார்.

கடந்த திங்கட்கிழமை மதுரை வந்த வாசன், அம்பேத்தகர் பிறந்தநாளை முன்னிட்டு, அழகர்கோவில் சாலையில் உள்ள அவரது சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர், செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியின்போது மேலும் கூறியதாவது:-

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழக்குடியினர் நலனில் தனி அக்கறை செலுத்துகிறது. பழங்குடியினருக்காக தேசியக் கொள்கையை உருவாக்கி செயற்படுத்தப்பட்டு வருகிறது. 50,000 காலி பணியிடங்களில் பழங்குடியினர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் கல்விக்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அத்தியாவசியப் பொருள்களின் விலை உயராமல் தடுக்க, பல்வேறு சலுகைகளை, விதி விலக்குகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சர்வதேச அளவில் பணவீக்கம் அதிகரித்திருப்பது விலைவாசி உயர்வுக்கு முக்கிய காரணம் என்றாலும், இந்தியாவில் மக்களை பாதிக்காத அளவுக்கு அனைத்து நிலைகளிலும் மத்திய அரசு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறது. காவிரி முல்லைப் பெரியாறு, ஒகேனக்கல் விவகாரங்கள் மக்களின் உயிர்நாடிப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினைகளில் காங்கிரஸ் என்றைக்கும் தமிழக மக்களுக்கு குரல் கொடுக்கத் தயங்கியதில்லை. தமிழக மக்களின் உரிமையை எந்த நிலையிலும் யாருக்கும் விட்டுக் கொடுக்கமாட்டோம். அதேநேரத்தில், சகோதரத்துவம், அண்டை மாநில நட்பையும் கடைப்பிடித்து சுமுக சூழ் நிலையில் கிடைக்கக்கூடிய உரிமைகளை முறையாகப் பெறுவதில் உறுதியாக உள்ளோம் - என்றார்.

# இலங்கையில் ஊடகங்கள் மீதான வன்முறை; ஆட்சேபித்து நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டம்

நியூயோர்க்,ஏப்.17

ஊடகவியலாளர் திஸநாயகம் தடுத்து வைக்கப்படக் காரணமாகவுள்ள அவசரகாலச் சட்டம் சர்வதேச விதிமுறைகளுக்கு எதிரானது என்று மனித உரிமை பணியாளர் மரியம் யங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஊடகங்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை நூற்றுக் கணக்கான மனிதஉரிமை ஆர்வலர்கள் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

சர்வதேச மன்னிப்பு சபை ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மரியம் யங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திஸநாயகத்திற்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவேண்டும் அல்லது அவரை விடுதலைசெய்ய வேண்டுமென கொழும்புக்கு அழுத்தம் கொடுக்குமாறு அமெரிக்காவை சர்வதேச மன்னிப்புச் சபை கேட்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவுக்கு கேந்திர நலன்கள் எதுவும் இல்லாவிட்டாலும் அது இராணுவப் பயிற்சி மற்றும் கண்காணிப்பு வசதிகளை வழங்குகின்றது. இதன் காரணமாக அதற்கு இலங்கை விவகாரத்தில் செல்வாக்குள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கருத்துப் சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'பேரூந்தில் ஏறுங்கள்' எனும் பெயரில் சர்வதேச மன்னிப்புச் சபை ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரக அலுவலகம் முன்னால் திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இலங்கையில் பத்திரிகையாளர் ஜே. எஸ்.திஸநாயகம் ஒரு மாத காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையையும், 2006 இல் 'சுடர்ஒளி' செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் திருகோணமலையில் சுட்டுக்கொல்லப்பட்டதையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கைத் தூதரக அலுவலக அதிகாரியைச் சந்தித்து உரையாடிய சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் குழுவின் பேச்சாளர், அடுத்த இரு வாரங்களுக்குள் திஸநாயத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படும் என்றும் அவருக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படும் என்றும் இலங்கை அதிகாரிகள் உறுதியளித்தனர் எனத் தெரிவித்துள்ளார். (உ)

# இலங்கை வங்கியின் சகல கிளைகளுக்கும் நாளை விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப் 17

நாளை வெள்ளிக்கிழமை விசேட வங்கி விடுமுறையை ஒட்டி இலங்கை வங்கியின் கிளைகள் அனைத்தும் வாடிக்கையாளர் சேவைகளுக்காக மூடப்பட்டிருக்கும் என வங்கியின் வட வலய செயற்பாட்டு முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# சாவகச் சேரி நூலகத்தில்' புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப் 17

உலக புத்தக தினத்தை ஒட்டி சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தினர் புத்தகங்களின் கண்காட்சியினை நேற்று புதன் கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரை சாவகச்சேரி பொதுநூலக மண்டபத்தில் நடத்த ஏற்பாடாகி இருந்தது.

யாழ்.ஸ்ரீலங்கா புத்தகசாலையின் அனுசரணையுடன் கண்காட்சி நடத்தப்படவுள்ளதால் பிரதேச பாடசாலைகள், பொது நூலகங்[illegible], மாணவர்கள் தமக்கு தேவையான [illegible]த்தகங்களைக் கொள்வனவு செய்ய [illegible]னதெரிவிக்கப்பட்டுள்ளது.

# யா[illegible] அதிபருக்கான [illegible] வாசஸ்தலம் [illegible]மைக்கும் பணி ஆரம்பம்

நல்லூர், ஏப்.17

யாழ்.அரச அதிபருக்கென புதிய வாசஸ்தலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'நிக்கொட்' விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ரூபா 250 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தப் புதிய விடுதி யாழ். செயலகத்தை அண்டியுள்ள பழைய பூங்காவளவில் அமையவுள்ளது. (202-111)

# கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலைக்கு சப்பாத்துக்கள் அன்பளிப்பு

கோப்பாய், ஏப்.17

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்கும் அதி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 64 மாணவர்களுக்கு கரித்தாஸ்- கியுடெக் நிறுவனத்தினர் சப்பாத்துக்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளதாக பாடசாலை அதிபர் ச.லலீசன் தெரிவித்தார். (202-72)



பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கென கெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட 60 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் கெயர் நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நிக்ஒஸ்பொன்ட் புதிய வீடொன்றை நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீ[illegible]ரன் ஆகியோர் வீட்டிற்கான திறப்புகளைப் ப[illegible]ளிகளிடம் கையளிப்பதை அடுத்துள்ள இரு படங்களிலும் காண[illegible]ம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண கிராம அபிவிருத்தி
திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில்
நடத்தப்படும் தையல், மனையியல்

**மாபெரும் கண்காட்சி**

இடம்: யாழ்.இந்துக் கல்லூரி
காலம்: 18,19, 04.2008
நேரம்: காலை 09.30 முதல் மாலை 04.30 வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(73197)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்துக்குமாரசாமி சிவபாக்கியம்
(மீனாட்சி)



நல்லூர், ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மு.சிவபாக்கியம் (மீனாட்சி) 15.04.2008 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை முத்துக்குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்புச் சகோதரியும் மாணிக்கத்தின் மைத்துனியும் கோகிலாம்பாள் (ரதி), புனிதவதி (பட்டு), விமலாதேவி (பபா) ஆகியோரின் பாசமிகு தாயும் பாலசுந்தரம், தியாகராஜா, வேலாயுதபிள்ளை ஆகியோரின் மாமியும் ஹயானி - பிரபாகர் (கனடா), மகிலா - பிரான்சிஸ் (கொமர்ஷல் வங்கி, சுன்னாகம்), துஷானி - கிறிஸ்கரன், றஜிலா - சதீஸன், ஜனனி - கோகுல்ராஜ் (கனடா), தவபாலினி, அனுஷியானி, லோஜிகா - தயாபரன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் டானியல், லினோஜி, கிறிஸ்ரிகா, கிஷானா, அனில் (கனடா), சதுஸ்ருதி (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.04.2008) வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் பி.ப 2 மணிவரை இறுதி அஞ்சலிக்காக பொறளை ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக பொறளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: 0112 500 537
0602214817
(73195)
தகவல்:
பிள்ளைகள்.

## தம்பிராசா வினோதினி (கீத்தா)



உடுவிலைச் சேர்ந்த தம்பிராசா வினோதினி (கீத்தா) நேற்று(16.04.2008) புதன் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா - கற்பகம் தம்பதியரின் இரண்டாவது மகளும் தம்பிராசா (போல்) அவர்களின் அன்பு மனைவியும் நிமலேஸ்வரன் (நிமால்), மேரி மெற்றில்டா, யோன்நிவாஸ், எப்ஷிபா, சாமுவேல், பியூலா, டானியல் ஆகியோரின் பாசமிகு தாயும் றயினி, இராசகுமார், சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் இன்று (17.04.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் அப்போஸ்தல சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*5ஆம் ஒழுங்கை,*
*மானிப்பாய் வீதி, உடுவில்*
*யாழ்ப்பாணம்.*
(73196)
தகவல்:
தம்பிராசா (கணவர்)

## திருமதி பொன்னையா அன்னம்மா



காரைநகர், பாலவோடையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா அன்னம்மா 14.04.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சுந்தரம்மா ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் பாலசுப்பிரமணியம், ராமநாதன், மயில்வாகனன், செல்லம்மா (UK), தையல்நாயகி ஆகியோரின் சகோதரியும் சிவபாலசுந்தரம், பாலேந்திரன், காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் புவனேஸ்வரி, சரஸ்வதி, இராஜேஸ்வரி, ராசமலர் காலஞ்சென்றவர்களான சந்திரமலர், சறோஜாதேவி ஆகியோரின் தாயும் நவரத்தினம், காலஞ்சென்ற சரணவப்பெருமாள் மற்றும் செந்தில்நாதன், முருகானந்தன், விக்கினேஸ்வரன், நல்லபிள்ளை, இந்திராவதி ஆகியோரின் மாமியும் தர்சினி, தேவராணி, மேனகா, ஸயந்தன், நந்தகுமார், கேதீஸ்வரன் (UK), கணேகேஸ்வரன், பிரதீபன், லிங்கப்பிரியா, தனுப்பிரியா, தங்கேஸ்வரன்(UK), பிரபாகரன் (UK), அமலேஸ்வரன் (UK), சுகந்தினி (UK), கமலினி, அமுதராஜ் (UK), சுரேந்திரன் (பிரான்ஸ்), சிவசங்கரி (மக்கள் வங்கி), பரணீதரன், மைதிலி, அனுசியா, மயூரன், பகீரதன், ரேவதி, பவானி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.04.2008) வியாழக்கிழமை வைரவர் கோயில் வீதி, வைரப்புளியங்குளம், வவுனியா இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*17/2, ஐயனார் கோயிலடி வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*
தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(73198)

## நெடுந்தீவில் உவர் நீர் தடுப்பணை

யாழ்ப்பாணம்,ஏப்.17

நெடுந்தீவுப் பகுதியில் உவர் நீர் தடுப்பு அணைகள் இரண்டு அமைப்பதற்கென நிக்கொட் 1.5 மில்லியன் ரூபா வரை நிதியுதவி வழங்க உள்ளது.

பணங்காணி, ஆற்றுக் கரை ஓடை ஆகிய பகுதிகளில் இந்த அணைகள் கட்டப்பட வுள்ளன. (202-111)

## பாலர் பராமரிப்பு நிலைய புதிய கட்டடம் திறப்பு

சாவகச்சேரி,ஏப்.17

மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு இடம் பெறவுள்ளது. நிலையச் செயலாளர் இ.சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஜி.ரி.இசற் வதிவிடப் பிரதிநிதி பி.வி.கலாநிதி போய்லூப், தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (203-131)

## சிக்கிரியான் பள்ளம் அ.த.க. பாடசாலைக்கு புதிய கட்டடம்

நெடுந்தீவு மத்தி சிக்கிரியான் பள்ளம் அ.த.க. பாடசாலையில் புதிதாக வகுப்பறைக் கட்டடம் ஒன்றை அமைக்க யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

'நிகொட்' நிறுவனம் இக்கட்டடம் அமைக்கவென 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (203-131)

## நுண்கலைத் துறை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்17

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறை கலை வட்டத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்று வரும் கருத்தரங்குத் தொடரில் நாளை பிற்பகல் 2 மணிக்கு புதிய கலைப் பீட கட்டடத்தொகுதியில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் செல்வி குமுதா சோமசுந்தரக்குருக்கள் ''யாழ்ப்பாணத்து மட்க்கட்டக் கலை'' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

## தென்மரட்சியில் இணைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பளம் இன்று

யாழ்ப்பாணம்,ஏப்17

தென்மரட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் வெளி மாவட்ட ஆசிரியர்களுக்கான ஏப்ரல் மாதச் சம்பளம் இன்று வலயக்கல்வி அலுவலகத்தில் வழங்கப்படுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித் துள்ளார்.

இந்த ஆசிரியர்களுக்கு இனி வரும் காலங்களில் வங்கிகள் ஊடாக சம்பளம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் சாவகச்சேரியில் உள்ள வங்கியில் உள்ள தமது கணக்கு இலக்கத்தினை வலய நிதிக் கிளையில் கையளிக்குமாறும் அறிவித்துள்ளார்.

## தீவக வலய அதிகாரிகள் மாகாண வள அணியுடன் இன்று சந்திப்பு

தீவக வலய கல்வி அலுவலர்களுக்கு மாகாணமட்ட வள அணியினர் நடத்தும் செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் யாழ்.ஆசிரியர் வளநிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வில் வலயக் கல்விப் பணிப்பாளர், கணக்காளர், கருத்திட்ட இணைப்பாளர்கள், முறைசாரா மற்றும் விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (1)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உப அதிபர்
ந.நந்தகோபனின்
அன்புச் சகோதரி
திருமதி
**பத்மலோஜினி மரியதாஸ்**
அவர்களின் மறைவையிட்டு அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**மல்லாகம் ம.வி.**
(A)

# மரண அறிவித்தல்கள்

## சொக்கலிங்கம் அன்னலட்சுமி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் அன்னலட்சுமி நேற்று (16.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சொக்கலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், பாஸ்கரன், சுமதி, கோமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பலதா, லோகநாதன், தயாபரன் ஆகியோரின் அன்பு மாமியும் லெளசிகா, மிதுசன், தனுசன், ஷானுஜன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.04.2008) வியாழக்கிழமை மு.ப. 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு.*
(சி/552453)
தகவல்:
இ.லோகநாதன்
(மருமகன்)

## கந்தையா சிவலிங்கம்
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவலிங்கம் நேற்று (16.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட மகனும் அமரர்களான முத்து - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் இரத்தினமணியின் அன்புக் கணவரும் அமரர்களான அருளிங்கம் (கொழும்பு), துரைசிங்கம் (கொழும்பு) மற்றும் அரசலிங்கம் (கொழும்பு), சரஸ்வதி (லண்டன்), இராஜேஸ்வரி (நீர்வேலி), மங்களேஸ்வரி (வவுனியா), புவனேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தம்பிராசா, சிவபாக்கியம் (அராலி), அமரர்களான தங்கராசா (அராலி), லோகேஸ்வரன் (அச்சுவேலி) மற்றும் சிவபாலசுந்தரம் (வவுனியா), கந்தசாமி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் மோகன் (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), சரோஜினி, குமுதினி (லண்டன்), அசோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜி, ஜெயபாலன், நவரத்தினம் (சின்னண்ணை), அகிலன், கமலகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் பற்றிக், ஜெனிவா, ஜெரன், ஜெஸ்சன், ராகுலன், டினோசன், நவீனயா, சிவப்பிரியா, ஜெனார்த்தினி, றஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2008) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.*
(73199)
தகவல்:
நவரத்தினம்
(சின்னண்ணை - மருமகன்)

## முருகேசு பொன்னம்பலம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பொன்னம்பலம் நேற்று (16.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் நடேசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நிர்மலாதேவியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான றுக்குமணி, இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திராணியின் அன்பு மாமனாரும் இராசதேவி (ஆயுள்வேத வைத்தியர்), பொன்னம்பலம்.(குமார்) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (17.04.2008) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 1 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக செம் மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*138/7, நல்லூர் கோயில் வடக்கு வீதி,*
*நல்லூர்.*
(73253)
தகவல்:
இராசதேவி
(பெறாமகள்)

## இராமநாதன் சிதம்பரநாதன்



சுன்னாகம், உடையார்வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் நேற்று (16.04.2008) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி இராமநாதன் - சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காங்கேயன் (ஓய்வுபெற்ற ஊழியர், மின்சார சபை), ஜெகஜோதி (லண்டன்), சடாச்சரம் (டென்மார்க்), யசோதரா (லண்டன்), யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இலட்சுமிப்பிள்ளை, சந்திரமோகன், இராஜேஸ்வரி, நிகிலாகீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் தெய்வநாயகி, காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை ஸ்ரீனிவாசன், நடேசன் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் பிரதீபன், யாளினி, நடனி, பார்த்தீபன், டர்சினி, பிரணவன், கீர்த்தினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2008)வியாழக்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தில்லை தட்டி ஒழுங்கை,*
*சுன்னாகம்.*
(73252)
தகவல்:
சி.காங்கேயன்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டட, தளபாட வசதிகள் குறையாக உள்ளபோதும் மாணவர்களின் கல்வியில் அதிக அக்கறை செலுத்தும் அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை


பாடசாலை அதிபர்

அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை 1834 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாகும். பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் 57 ஆண்பிள்


பாடசாலையின் முகப்புத் தோற்றம்

ளைகளும் 56 பெண்பிள் ளைகளும் கல்வி கற்றதை பாடசாலையின் ஏடுகளின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

கிராமப் புறத்தில் அமைந்துள்ள இப் பாடசாலை இன்று கல்விப் பணியில் தலை நிமிர்ந்து நிற்கின்றது என்று கூறினால் மிகையாகாது.

## வரட்சிக் காலங்களில் மாணவர்கள் குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள்

அடுத்த ஆண்டு 175ஆவது ஆண்டை நிறைவு செய்யவுள்ள இப்பாடசாலை பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கல்வியில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

பாடசாலையின் அதிபர் அ.இரங்கநாதன் பாடசாலை பற்றிக் கூறியதாவது:-

இப்பாடசாலையில் தற்போது 140 மாணவர்கள் தரம் 01 முதல் தரம் 05 வரையான வகுப்புகளில் கல்வி கற்று வருகின்றார்கள். 05 ஆசிரியர்கள் காணப்படுகின்ற போதிலும் ஆங்கில ஆசிரியர் இல்லாமை பெரும் குறையாகவே உள்ளது.பாடசாலைக்கும் போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லை. பாதுகாப்பு இல்லா தமை காரணமாக ஏற்கனவே பல பொருள்கள் திருட்டுப் போயுள்ளன. இதன் காரணமாக எந்த ஒரு பொருளையும் பாடசாலையினுள் வைத்து விட்டுச்செல்லமுடியாத நிலை உள்ளது.

சுற்றாடலில் உள்ள பிள்ளைகளே இப் பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள். மாணவர்கள் ஆங்கிலப் போட்டிகளில் குடும்ப மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்களை பெற்றுள்ளதுடன்கோட்ட மட்டம் வரை கலந்து கொண்டுள்ளார்கள். இதே போன்று தமிழ் தினப் போட்டிகளிலும் கலந்துகொண்டு திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார்கள். எழுத்தாக்கப் போட்டியில் செல்வி கிருபாகரன் விஷ்ணுகா கோட்ட மட்டதில் முதலாம் இடத்தையும் வலய மட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை யிலும் கூட ஏனைய பாடசாலைகளுடன் போட்டியிடும் நிலை காணப்படுகின்றது. 2006ஆம் ஆண்டில் செல்வி சி.விஷ்ணுகா 166 புள்ளிகளைப் பெற்று தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் உயர்புள்ளி பெற்ற மாணவியானார். அத்துடன் கடந்த ஆண்டு பெறுபேறுகளில் 26 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி சுதர்சன் சுபஷாந் 149 புள்ளிகளையும் சுந்தரலிங்கம் சுலக்ஸன் 145 புள்ளிகளையும் பெற்றனர்.

விளையாட்டு மைதானம் இல்லை. மாணவர்கள் மைதானம் இல்லை என்பதால் ஒதுங்கி இருக்கவில்லை. பாடசாலையின் சிறிய முற்றத்தை விளையாட்டு மைதானமாகக் கொண்டு அதிபரும் ஆசிரியரும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றார்கள். இதன்மூலம் செல்வி ஞா.வேணுஷா 9 வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில் கலந்துகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டட வசதியைப் பொறுத்தவரையில் போதுமானதாக இல்லை. குறிப்பாக தற்போதைய குழு கற்றல் முறைக்கு ஏற்ப வகுப்பறைகள் காணப்படவில்லை. திறந்த மண்டபங்களாக வகுப்பறைகள் உள்ளன. இதனால் கட்டட வசதி இப்பாடசாலைக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டியுள்ளது.

வரட்சிக் காலத்தில் பாடசாலை குடிதண்ணீர் பிரச்சினைக்கும் முகம் கொடுக்க வேண்டியதாக இருக்கின்றது. சுற்றாடலில் போதிய நல்ல குடிதண்ணீர் இல்லை. பாடசாலை வளவில் உள்ள கிணற்றுநீர் நல்லதாக உள்ளபோதும் நீர் வற்றுவதினால் வரட்சி காலங்களில் குடிதண்ணீரைப் பெறுவது மிகவும் சிரமாக உள்ளது.

தளபாடமும் ஒரு வகுப்புக்கு பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது. ஓர் அன்பரின் உதவி மூலம் பிளாஸ்திக் கதிரைகள் பெறப்பட்டு தளபாடத் தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பழைய மாணவர் சங்கம் இயங்கவில்லை. இதனை அமைக்க அதிபர் பெரும் முயற்சி மேற்கொள்கின்றபோதிலும் அது கைகூடவில்லை என்கின்றார் அதிபர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இயங்குகின்றது. மாணவர்களின் பெற்றோர்கள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களாக இருப்பதினால் பாடசாலைக்கு உடல் ரீதியில் உதவிகளை செய்து வருகின்றார்கள். பொருளாதார ரீதியாக உதவிகளைப் பெரிய அளவில் செய்ய முடியாதவர்களாக அவர்கள் உள்ளனர்.

அரசசார்பற்ற நிறுவனங்களான ஜி.ரி. இசற் மலசலகூடம் அமைப்பதற்கும் 'யுனிசெப்' அமைப்பு நீர்தாங்கி அமைப்பதற்கும் உதவிகளைச் செய்துள்ளார்கள். இதேபோன்று அளவெட்டி மக்கள் சங்கம் உதவிகளை இயன்றவரையில் செய்து வருகின்றது. ஆங்கிலப்பாடம் கற்பிக்க ஒரு தொண்டர் ஆசிரியருக்கு அது உதவி செய்து வருகின்றது. பாடசாலைக்கு கணனி உதவி செய்ய அந்தச் சங்கம் தயாராக இருக்கின்ற போதிலும் பாடசாலையின் பாதுகாப்பற்ற நிலை காரணமாகக் கணனியைப் பெறமுடியாமல் உள்ளது.

உலக உணவுத்திட்டத்திற்கு அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களின் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து உதவிகளை




செய்து வழங்கி வருகின்றார்கள். இதற்கு பெற்றோர்களின் உதவியும் கிடைக்கின்றது.

நூலக வசதி இல்லை. அத்துடன் ஆரம்பப் பிரிவு பாடசாலையாக இருப்பதனால் சிறுவர் பூங்கா உள்ளபோதும் அது முழுமையானதாக இல்லை. இவைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும். இதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி தேவைப்படுகின்றது.

பாடசாலை பரிசளிப்பு விழாவுக்கென அமரர் சின்னப்பு தம்பதிகளினால் பணம் வைப்பிலிடப்பட்டு வருடாந்தம் பரிசளிப்புக்கு வேண்டிய நிதியில் ஒரு பகுதி வழங்கப்பட்டு வருகின்றது. 1984ஆம் ஆண்டில் இருந்து இந்த உதவி வழங்கப்படுகின்றது.

பாடசாலையில் களஞ்சிய அறை வசதி இல்லை. அதிபரின் சிறிய அறையே களஞ்சியமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வருடாந்தம் பாடசாலையில் இடம்பெறும் நவராத்திரி விழாவுக்கு அளவெட்டி தவளகிரி முத்துமாரியம்மன் ஆலய தேவஸ்தானத்தினர் உதவிகளை புரிந்து வருகின்றார்கள்.

- பவித்திரன் -

# சமூகத்தில் மிக உயர்வானதாக மதிக்கப்பட்ட ஆசிரியத் தொழிலின் இன்றைய நிலை என்ன?

"என்ன மச்சான் சரியான டல்லா இருக்கிறாய்? இல்லையடா ஒரு வேலையும் கிடைக்குதில்லை. என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. ஏன் மச்சான் உனக்கு ரீச்சிங் கூடக் கிடைக்கேல்லையே?".

நீண்டநாள்களின் பின் சந்தித்த இரு நண்பர்களிற்கிடையே நடைபெற்ற ஓர் உரையாடல் இது. இவ்வுரையாடலின் மூலம் சமூகத்தின் மிக உயர்ந்த, மதிக்கப்படவேண்டிய ஆசிரியத் தொழிலின் இன்றைய நிலையை உணரக்கூடியதாக உள்ளது. ஆசிரியத் தொழில் தொடர்பான இன்றைய சமூகத்தின் உளப் பிரதிபலிப்பை, மனப்பாங்கை அறியக்கூடியதாக உள்ளது.

முன்னொரு காலத்தில் மிகவும் போற்றுதலுக்குரியதாகக் கருதப்பட்ட ஆசிரியத் தொழில், சமூகத்தின் நற்பிரஜைகளை இன்னும் உருவாக்கிக் கொண்டிருக்கும் ஆசிரியத்தொழில் இத்தகைய இழிவு நிலைக்குச் சென்றமைக்கான காரணம் என்ன?

இதற்கான பிரதான காரணமாக இலங்கையின் ஆசிரிய ஆள்சேர்ப்பு முறை அமைகிறது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் ஆசிரியத் தொழிலானது தொழில் வழங்கும் துறையாகக் கருதப்பட்டு, தொழிலின்மைப் பிரச்சினையை நீக்குமுகமாகவும் பல்வேறு அரசியல் காரணங்களிற்காகவும் எதுவித தகுதிநிலையுமின்றி பெரும் எண்ணிக்கையில் காலத்திற்குக் காலம் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இதனால் ஆசிரியத் தொழிலில் ஈடுபாடற்ற பெரும்பாலான இளைஞர்கள் வேலைவாய்ப்பு ஒன்றையே நோக்காகக் கருதி இத்தொழிற்றுறையினுள் நுழைகிறார்கள்.

நிலைமை இவ்வாறிருக்க, ஆசிரியத் தொழிலிற்கு விரும்பி வந்து அதன் மகத்துவம் உணர்ந்து செயற்படும் ஆசிரியர்களும் சில அதிகாரிகளினதும் சில அதிபர்களினதும் செயற்பாடுகளினால் மிகவும் மனமுடைந்து போயுள்ளதையும் பரவலாகக் காணமுடிகிறது.

தற்போதைய எமது கல்விசார் அதிகாரிகள் ஆசிரிய[illegible] வகுப்பறையில் கற்பிக்கிறாரா இல்லையா? என்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதில்லை. அவர்கள் தமது அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்கிறார்களா என்பதைப் பற்றித்தான் சிந்திக்கிறார்கள். அதனைச் சோதிப்பதற்காகத்தான் போலும் ஆசிரியர்களின் தலையில் எவ்வளவு சுமையை ஏற்றமுடியுமோ அவ்வளவு சுமையை ஏற்ற முயல்கிறார்கள்.

உதாரணமாக, ஓர் ஆசிரியர் பாடக்குறிப்பு எழுதவேண்டியது அவசியம். ஆனால் பாடக்குறிப்பு என்பது ஆசிரியர்களுக்கான முன்னாயத்தமேயன்றி அதிகாரிகளின் சிந்தனைக்கேற்ப எழுதப்படுவதன்று. ஆசிரியர் தனது மாணவர்களினதும் வகுப்பறை சமூகச் சூழல் என்பவற்றினதும் நிலை கருதி பொருத்தமான முறையில் பாட முன்னா

## அரசியல் காரணங்களைக் கருத்திற்கொண்டு வழங்கப்பட்டு வரும் ஆசிரியர் நியமனங்கள்

யத்தம் செய்து, அதற்கேற்ற வகையில் பாடக்குறிப்பு எழுதுவதுதான் சாலச்சிறந்தது. ஆனால் எமது அதிகாரிகளினால் பாடக்குறிப்பு என்பது இப்படித்தான் இருக்கவேண்டும் என்று கட்டளையிடப்படுகிறது. அத்தகைய கட்டளைகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள்.

''சேர் என்ன 5E முறையில் பாடக்குறிப்பு எழுதேக்க ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ள இணைப்புப் படிவம், கண்டாய்வுப் படிவம் எல்லாவற்றையும் பிரதிசெய்யவேணுமாம். ஓம் சேர். போன முறை வந்து சொன்னவையெல்லே. என்ன சேர் அப்பிடியெண்டா ஒரு பாடக்குறிப்பு சி.ஆர். கொப்பியில 3 பக்கத்திற்கு மேல் வருகுது. நான் 6 வகுப்பிற்கு பாடம் எடுக்கிறன். அப்ப மொத்தமா [illegible] டத்தட்ட 20 பக்கம் எழுதவேணும். அப்ப நாங்க வேறையொரு வேலையும் செய்யிறதில்லையே''.

இது அண்மையில் இரு ஆசிரியர்களிற்கிடையே நடந்த உரையாடலின் ஒரு பகுதி. இங்கு வழிகாட்டியில் உள்ள இணைப்புப் படிவம், கண்டாய்வுப் படிவம் என்பவற்றை அப்படியே பிரதிசெய்து எழுதுவதால் யாது பயன்?.

அதேபோன்று இலங்கையின் கல்வி முறைமை மதிப்பீட்டுக் கலாசாரத்தில் இருந்து, கணிப்பீட்டுக் கலாசாரத்திற்கு முற்றாக மாறவில்லை. மாறவும் முடியாது. இன்றும் க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) ஆகிய பொதுப்பரீட்சைகளே ஒரு மாணவனின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. இத்தகைய மதிப்பீட்டுக் கலாசாரம் முக்கியத்துவம் பெறுகின்ற நிலையில் கணிப்பீட்டுக் கலாசாரம் செயலிழந்து நிற்கிறது. இதனைத் தென்னிலங்கைப் பாடசாலைகளில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனினும் எமது அதிகாரிகள் கணிப்பீட்டினை விட்டபாடாக இல்லை. இந்தமுறை, எந்தளவுக்கு பயனுள்ளதாக அமைகிறது என்பது பற்றி சிந்திக்காமல், அமுல்படுத்தியே தீரவேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். இதனால் ஆசிரியர்களின் சுமையே அதிகரிக்கிறது.

இங்கு ஓர் ஆசிரியரிற்கும் மாணவனுக்கும் இடையில் நடந்த உரையாடலைக் குறிப்பிடுதல் பொருத்தமானது.

*ஆசிரியர்:-* ரமேஸ் என்ன ஒப்படை இன்னும் தரேல்ல. நாள் செல்லச் செல்ல மாக்ஸ் குறையும்.

*மாணவன்:-* சேர், படம் கீறிட்டேன். ஆனால் குறிக்கேல்லை. எத்தனை மாக்ஸ் போடுவியள்?

*ஆசிரியர்:-* அதற்குரிய நாலு மாக்ஸ் தவிர மீதி 16 இற்குப் போடுவன்.

*மாணவன்:-* அப்ப பரவாயில்லை சேர் போடுங்கோ.

இவ்உரையாடல் மாணவர் மத்தியில் கணிப்பீடு தொடர்பான மனப்பாங்கை எடுத்துக் காட்டுகிறது.

இந்நிலை எங்கு இட்டுச் செல்லப் போகிறது. ஆசிரியத் தொழிலிற்குக் கற்றவர்கள் வரப் பின்னடிக்கும் நிலைமை, ஆசிரியத் தொழிலில் இருப்பவர்கள் வெளியேறத் துடிக்கும் நிலைமை, ஆசிரியர்களினுடைய கல்வி தொடர்பான எதிர் மனப்பாங்கு, இன்றைய சமூகத்தினுடைய ஆசிரியத் தொழில் தொடர்பான மனப்பாங்கு என்பன எதிர்காலத்தில் ஆசிரியத் தொழிலை எங்கு இட்டுச் செல்லப்போகிறது. இதன்மூலம் யாழ்.மாவட்டக் கல்வியின் நிலை எங்கு செல்லப்போகிறது? இக்கேள்விகள் யாவும் விடைகள் தெரியாத வினாக்களாகவே தொக்கு நிற்கின்றன.

பணவீக்கம் அதிகரித்துள்ள, வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இன்றைய நிலையில், ஓர் ஆசிரியர் தனியே தனது அரச ஊதியத்துடன் மட்டும் வாழமுடியுமா? அதுவும் [illegible]ட்டத்தில் நிலவுகின்ற பொருள்களின் வி[illegible]லையேற்றத்தின் மத்தியிலே அந்த ஊதியம் போதுமானதா? நிச்சயமாக இல்[illegible] இதனால் அவர்கள் வேறு ஏதோ ஒரு [illegible]ழிலை மேலதிகமாகச் செய்ய நிர்ப்ப[illegible]கப்படுகிறார்கள். இந்த நிலையில் தங்களுடைய பொருளாதாரத்தை கருத்திற்கொள்ளும் அதிகாரிகள், சற்று ஆசிரியர்களுடைய பொருளாதாரத்தையும் கருத்திற்கொண்டு சனி, ஞாயிறு, பொதுவிடுமுறை தினங்களையாவது அவர்களிற்கு விடுமுறையாக அளிக்க முன்வரவேண்டும்.

இன்று பல ஆசிரியர்கள் கூறும் விடயம் "வீணாக இங்கு வந்துவிட்டோம். பென்சனும் எடுக்கமுடியவில்லை". இந்த நிலைமை எதனால் வந்தது. அவர்களால் இத்தகைய சுமைகளைத் தாங்கமுடியவில்லை.

இன்று பெரும்பாலான ஆசிரியர்கள் தமது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதிலும் பார்க்க, அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதிலேயே குறியாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் ஆசிரியர்களுடைய கல்வி தொடர்பான, ஆசிரிய தொழிற்றுறை தொடர்பான எதிர்மனப்பாங்கும் அவர்களுடைய பொருளாதார நிலையுமே. ✱

-------- பிரியன் --------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
ஓம் அன்பே சிவம்
''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

# ஈழத்து நகுலேஸ்வர வட இலங்கை வலய மேழியூர் சைவப்புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு அவர்கள் அருளிச் செய்த "உவமையிலாக் கலைஞானம்" நூல் அரங்கேற்ற விழா

காலம்: சர்வதாரி வருடம் 2008.04.19 சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம், நல்லூர், யாழ்ப்பாணம்

## நிகழ்ச்சி நிரல்

01. காலை 8.30 நல்லூர் கந்தசுவாமி திருக்கோயில் அர்ச்சனை வழிபாடு ஆதீன குருமுதல்வர் சிலைக்கு மாலை சூட்டுதலும் கோயில் பூசையும் திருமுறை குருதோத்திரம், வேதபாராயணம் ஓதுதலும்
02. 9.00 மணி மங்கள விளக்கேற்றல் திரு.மு.சரவணபவ, மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம்.

தலைவர்: சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை (தலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்)

வரவேற்புரை:
ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர்)
சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ.செல்லத்துரை (போசகர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்)

பிரதம விருந்தினர்கள் உரை: பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் (துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கந்தையா கணேஷ் (அரச அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்)
வி.ரி.செல்வரத்தினம் (மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள் உரை: எஸ்.கே.யோகானந்தன் (பீடாதிபதி, தேசியக் கல்வியியற் கல்லூரி யாழ்ப்பாணம்)
நா.காங்கேசபிள்ளை M.Phil (அதிபர்- ஆசிரியர்பயிற்சிக் கல்லூரி, பலாலி)
ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்-ஆசிரிய கலாசாலை, கோப்பாய்)

03. நூல் வெளியீட்டுரை: பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் (வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
04. முதற்பிரதி, சிறப்புப்பிரதி வழங்கல்:
05. நூல் விமர்சனமும் நயப்புரையும்:
   1. பேராசிரியர் கலைவாணி இராமநாதன் (இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
   2. கலாநிதி மா.வேதநாதன் (தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
   3. பேராசிரியர் கலாநிதி கந்தசாமி (பீடாதிபதி, பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
   4. பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா (தமிழ்த்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
   5. கலாநிதி நா.மு.வி.நவரத்தினம் (சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
   6. கலாபூசணம் எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்
   7. பண்டிதர், பண்ணிசையாளர் வ.யோகிஸ்நாயகம் (தலைவர், அகில இலங்கை திருமுறை மன்றம்)
   8. சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் (சமயப் பிரசாரகர், திருவாவடுதுறை ஆதீனம்)
   9. பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் (செயலர், யாழ்.ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம்)

06. பதில் உரையும் நன்றி உரையும்: நூலாசிரியர் சைவப்புலவர் சி.திருநாவுக்கரசு
07. திருமுறை ஓதல்: பண்ணிசையாளர் ந.இராமதாஸ்
08. முதற் பிரதிகளைத் பிரதம விருந்தினரிடமிருந்து பெறுபவர்கள்:
   01. திரு.நடராஜா சிவரத்தினம் [செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, பிராந்திய காரியாலயம்]
   02. திரு.கே.பூரணச்சந்திரன் D.E.E.Eng.(London), Chairman, Star Industrial Services Ltd.
   03. திரு.த.சண்முலிங்கம் [தலைவர், சைவப்பரிபாலன சபை, யாழ்ப்பாணம்]
   04. திரு.இரா.செல்வவடிவேல் [தலைவர், சைவசமய அபிவிருத்திக் கழகம், வண்ணை கற்பக விநாயக தேவஸ்தானம்]
   05. திரு.வி.கணேசராசா [அதிபர், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்]
   06. திரு.நா.வன்னியசிங்கம் [அதிபர், வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்]
   07. திரு.சு.சிவபாதசுந்தரம் [அதிபர், நாவலர் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்]
   08. திரு.க.வைத்திலிங்கச் செட்டியார் [தர்மகர்த்தா, வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்]
   09. தலைவர், தர்மகர்த்தா சபை வண்ணை வரதராசப் பெருமாள் தேவஸ்தானம்
   10. வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா [தலைவர், தர்மகர்த்தா சபை, சித்திரமேழி அம்பலவாணர் ஞான வைரவ தேவஸ்தானம்]

வைதீக சைவத் தமிழ்ச்சங்க சமூக அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் கைத்தலத்தில் இந்நூல் திகழ்ந்து தெய்வத்தின் திருவருளைப்பெற துணைநிற்கும்.

பழநி ஆனந்த இல்லம்,
சித்திரமேழி, இளவாலை.

தங்கள் சிவ அன்பில்
சி.திருநாவுக்கரசு.

உ
குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகர், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர், ஆதீன முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இரண்டாவது குருமஹா சந்நிதானம் அவர்கள் வழங்கிய **அருளாசிச் செய்தி**



அன்புசார் பெருந்தகையீர்!

இறையியல் தத்துவமும் வழிபாடும் முறைகளும் என்னும் நூல் வருவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பழமையும், பெருமையும் வாய்ந்த நம் சமயத்தில் அன்று தொடக்கம் இன்று வரை பல்வேறு வகையான நூல்கள் காலத்தின் தேவைக்கேற்ப வெளிவந்து கொண்டிருக்கிறன . மனித வாழ்வை மேன்மையடைய செய்வதற்கே சைவப் புலவர் சிவ சிதம்பரம் திருநாவுக்கரசு அவர்களின் முயற்சியால் நம் சமயத்தின் பழமையைப் பேணும் வகையில் புராண இதிகாச நூல்களின் தத்துவத்தை இன்றையவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இலகு தமிழில் வெளிவருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆலய வழிபாடு, சமய கிரியைகள், சிவபூஜை தத்துவங்கள், குரு இலட்சணம், ஆசாரியலட்சணம் இன்னும் பல விடயங்கள் எளிய முறையில் தந்திருப்பது மிக மகிழ்ச்சி. இந்த முயற்சியை செய்திருக்கும் திருநாவுக்கரசு அவர்களை வாழ்த்துகிறோம். அனைவரும் கற்றுப் பயன் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

(73148)

## இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் கன்வென்ஷனும் சுவிசேஷ ஆராதனைகளும்

இன்று 2008, ஏப்ரல் 17ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை தினமும் மாலை 4.30 மணிக்கு

இல 111, கண்டி வீதி, சுண்டிக்குளி சபைச்சாலையில் நடைபெறும்.

*இன்று வியாழன் முதல் ஞாயிறு வரை*

காலை 7 மணிக்கு தேவபாடம்,
காலை 9 மணிக்கு ஆராதனை,
மாலை 2 மணிக்கு பரிசுத்தாவியின் கூட்டம்

இயேசு: ''நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்'' *(யோவான் 11.40)*

*யாவரையும் அன்பாய் அழைக்கின்றோம்.*

இலங்கை பெந்தெகொஸ்தே சபை.

(73139)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் பிறந்த நாள் நினைவலையும்

தோற்றம் 17 ★ 04 ★ 1935



மறைவு 18 ★ 03 ★ 2008

### அமரர் தம்பிராசா இராஜேஸ்வரி

அன்பின் பிறப்பிடமே! பண்பின் இலக்கணமே!
பாசத்தின் அற்புதமே! எம் குலக்கோயிலே!
எமை வாழ வைத்த ஒளி விளக்கே!
எம் மூச்சுஉள்ளவரை -
உம் நினைவு எம்மோடு கலந்திருக்கும்.

*நீர்வேலி மேற்கு,*
*நீர்வேலி.*

(73168)

குடும்பத்தினர்.

## பயிற்சி நெறி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.17

வைத்திய, பதிவுசெய்த வைத்திய அதி காரிகளுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பயிற்சிநெறி தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப் பட்டுள்ளது என பணிப்பாளர் வைத் திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பயிற்சி நெறிக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

## விற்பனைக்கு

12''பட்டறை உடன் விற்பனைக் குண்டு.
தொடர்பு:- 0773583879

(73172)

## தவறிவிட்டது

கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த சிவகுமாரன் உஷாநந்தினி என்பவரது தேசிய அ. அட்டை (856953742v) விசேட அ.அட்டை, பல்கலைக் கழக அ.அட்டை என்பன 14.04.2008 அன்று யாழ்ப்பாணத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் சலேசியார் கோயிலடி சங்கானை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

இமையாணன் கலைமகள் ச.ச. நிலையத்தில் (13.04.2008) அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. அதிர்ஷ்டம் பார்க்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(73175) நிர்வாகம்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1976 ஆண்டு, செவ்வாய்க்குற்றமற்ற, கி.ப. 46 1/2, உத்திராடம் 2 ஆம் பாதம், மற்றும் 1970 ஆண்டு, 1 இல் செவ்வாய், கிரகபாவம் 83, சித்திரை 2 ஆம் பாதம், நியூஸ்லாந்து P.R உடைய பட்டதாரி மணமகன்களுக்கு N.R.C, R.C., அல்லது இந்து மணமகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். திரு.ச. உமாச்சந்திரன் இல. 46 புதுவீதி, [illegible] யாழ்ப்பாணம் 0779116346.

(73130)

## அஞ்சலி செலுத்துகின்றோம்



நாவற்குழி சித்திரவேலாயுத தேவஸ்தான பரிபாலனசபை உப தலைவராக நீண்டகாலம் பதவி வகித்து ஆலயத் தொண்டாற்றி சிவபதமடைந்த துரையப்பா ஐயாத்துரை அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

(73176) ஆலய பரிபாலன சபை.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி T.தேவதயாளினி அவர்களின் அன்புத் தாய்

திருமதி ரூபினி அரியமலர் தேவராஜா அவர்களின்

மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் அத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(சி/552445)

## மரண அறிவித்தல்

### *திருமதி தில்லைஈஸ்வரி விக்கினேஸ்வரன்*

யாழ்ப்பாணம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் 25, 3/1, 8ஆவது ஒழுங்கை, கொழும்பு-03ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைஈஸ்வரி விக்கினேஸ்வரன் (14.04.2008) திங்கட்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும் புத்தூர், பெரிய தோட்டம் குமாரசுவாமி, காலஞ்சென்ற சாந்தநாயகி ஆகியோரின் மருமகளும் கு.விக்கினேஸ்வரன் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும் Dr.நல்லைநாதன் (இரத்தவங்கி N.H.S.L.- கொழும்பு), மஞ்சுளா ஆகியோரின் தாயும் Dr.அருள்செல்வி (N.H.S.L.), Dr.சுதர்சன் (வைத்திய நிபுணர்) ஆகியோரின் மாமியும் செந்தூரன், அபிராமி, அஞ்சனா ஆகியோரின் பேர்த்தியும் Dr. மகேசன் (யாழ்.போதனா வைத்தியசாலை )அவர்களின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (15.04.2008) செவ்வாய்க்கிழமை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று (16.04.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கனத்தைப் பொதுமயானத்தில் தக னம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.நல்லைநாதன்
(அன்பு மகன்).

*தொ.பே.: 0112590898*

(73171)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் மடுவை அமைதிப் பிரதேசமாக்கி அன்னையை தேவாலயத்தில் அமர விடுங்கள்

## பருத்தித்துறை பங்குமக்கள் இரு தரப்பிடமும் கோரிக்கை

பருத்தித்துறை,ஏப்.17

மன்னார் மடுவை அமைதிப் பிரதேச மாக்கி மடு அன்னை மடுத் தேவாலயத்தி லேயே அமையப்பெற வேண்டும் என்று பருத் தித்துறைப் பங்குமக்கள் அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளனர்.

இவ்வாறு கோரிக்கை விடுத்து பருத் தித்துறைப் பங்குமக்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை செபமாலைப் பேரணி ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

பருத்தித்துறை தோமையப்பர் ஆலயத் தில் நடைபெற்ற விசேட பூசைகள் ஆரா தனையையடுத்து இச்செபமாலைப் பேரணி ஆரம்பமானது.

பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பேனாட் றெக்னோ அடிகளார் தலைமை யில் இடம்பெற்ற இச்செபமாலைப் பேர ணியில் அருட்திரு.டேமியன் அடிகளார், அருட்திரு.யூட்தாஸ் அடிகளார் உட்பட பருத்தித்துறை பங்கின் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இச்செபமாலைப் பேரணி நாலாங் குறுக் குத்தெரு, பருத்தித்துறை - தும்பளை வீதி யூடாக தும்பளை லூர்த்து அன்னை தேவா லயத்தையடைந்தது. அங்கு நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.


இதனையடுத்து இப்பங்கு மக்கள் மன் னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசேப் ஆண்டகைக்கு தமது கோரிக்கையை 'பக்ஸ்' மூலம் அனுப்பிவைத்துள்ளனர். சுமார் 400 ஆண்டுகளுக்கு மேலாக மடு அன்னை மடு தேவாலயத்திலேயே வீற்றிருந்தார்.

எனவே அன்னை மடுத்தேவாலயத்தி லேயே தொடர்ந்தும் வீற்றிருக்கவேண்டும் என்றும் பருத்தித்துறைப் பங்குமக்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர். (203-218)

# செயலமர்வும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம்,ஏப்.17

தீவகக் கல்வி வலயப் பாடசாலை அதி பர்கள், வலயக் கல்விசார் உத்தியோகத்தர் கள் ஆகியோருக்கு வலயநிலை கல்வி மேம்பாடு தொடர்பான செயலமர்வும் கலந்துரையாடலும் இன்று காலை 8.30 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன. (202)




# நீர்வேலி கந்தசுவாமி ஆலய விநாயகப் பெருமானுக்கு புதிய சித்திரத் தேர்

நீர்வேலி,ஏப்.17

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தினர் விநாயகப் பெருமானுக்கென தனியான சித்திரத்தேர் ஒன்றை அமைத்துள்ளனர். கடந்த சனிக்கிழமை புதிய தேரின் வெள் ளோட்ட நிகழ்வு இடம்பெற்றது.

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற வுள்ள ஆலயத் தேர்த்திருவிழாவின்போது விநாயகப் பெருமான் இந்த புதிய சித்திரத் தேரில் எழுந்தருளி வீதி வலம் வருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-224)

# இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டத்தின் மூலம் நவாலிப் பிரதேச மக்களுக்குக் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,ஏப்.17

நவாலி - கட்டுடையில் உள்ள இடி குண்டு நீர்த்தேக்கத் திட்டம் ஊடாக நவா லிப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் வழங் கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக இடிகுண்டு நீர்த் தேக்கத்தில் பெறப்படும் தண்ணீரைப் பரி சோதனைக்கு உட்படுத்த தேசிய நீர்வழங் கல் வடிகாலமைப்புச் சபை முகாமையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

குடிதண்ணீர் பரிசோதனை அடுத்த மாதப் பிற்பகுதியில் நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையும் யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபையும் இணைந்து இப்பரி சோதனையை மேற்கொள்ளவுள்ளன.

இதேவேளை - இடிகுண்டுப் பிரதேசம் அமைந்துள்ள கட்டுடைக் காணியை அதன் உரிமையாளர் பிரதேச சபைக்கு வழங்கு வதற்கு முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (202-95)

# வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் ஞாயிறன்று சித்திரா பூரணைத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.17

வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சித்திரா பூர ணைத் தீர்த்தத் திருவிழாவும் தர்ப்பணாதி கிரியைகளும் வழமைபோல் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு விசேட அபிஷேகமும் 8.15 மணிக்கு வில் லூன்றிப் புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரியும் 9 மணிக்குத் தீர்த்த மண்டபத்தில் அனுக் கிரகமும் 9.45 மணிக்குச் சுவாமி கோயி லுக்கு எழுந்தருளலும் இடம்பெறும்.

காலை 8.30 மணிக்கு - தீர்த்தவாரி முடிவுற்ற பின் - அடியார்கள் தீர்த்த சங் கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப் பணங்கள் செய்துகொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் நிர்வாகத்தி னர் அறிவித்துள்ளனர். (202)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவு கலை, இலக்கியப் போட்டிகளின் முடிவுகள்

கரவெட்டி,ஏப்.17

தேசிய கலை, இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலகம் நடத்திய போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட் டுள்ளன.

போட்டிகளில் முதல் மூன்று இடங் களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

கட்டுரை

*கனிஷ்ட பிரிவு:* ஷகிர்த்தியா சிறிஸ் குமார் - நெல்லியடி மத்திய மகா வித்தியால யம், மதிசாந்தினி ஜெயராஜா - உடுப் பிட்டி மகளிர் கல்லூரி, லோ.தேனுசா - விக்னேஸ்வரக் கல்லூரி.

*சிரேஷ்ட பிரிவு:* தயானி இராமர் - ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம் அறநெறிப் பாட சாலை, துவாரகா நவராசா - விக்னேஸ்வரக் கல்லூரி, ரவிச்சந்திரிக்கா நவரட்ணம் - நெல் லியடி மத்திய மகா வித்தியாலயம், ஜீவனா புஸ்பராஜ் - விக்னேஸ்வரக் கல்லூரி, சிசோனி நகுலேஸ்வரன் - விக்னேஸ்வரக் கல்லூரி.

கவிதை

*கனிஷ்ட பிரிவு:* கோசலா கோபாலசண் முகம் - நெல்லியடி மத்திய மகா வித்தியா லயம், வி.அனுராதா சிவரஞ்சன் - கரண வாய் பொன்னம்பல வித்தியாலயம், சஞ் சிகா செல்வராசா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

*சிரேஷ்ட பிரிவு:* நீதா முத்துராஜா - நெல் லியடி மத்திய மகா வித்தியாலயம், மேரி றேக்மி பிங்காரவேல் - விக்னேஸ்வரக் கல் லூரி, ஜீவனா புஸ்பராஜ் - விக்னேஸ்வரக் கல்லூரி, கனகரத்தினம் நிதர்சன் - நெல்லி யடி மத்திய மகா வித்தியாலயம்.

*திறந்த பிரிவு:* க.பாலன் - இமையா ணன், சி.செகராசசிங்கம் - அல்வாய் தெற்கு, திருமதி பிரபாவதி சுஜீவன் - கரணவாய் மத்தி, க.முத்துவேலு - இமையாணன்.

ஆங்கில கவிதை

*திறந்த பிரிவு:* திருமதி பகீரதி கலைச் செல்வன் - துன்னாலை.

சிறுகதை

*சிரேஷ்ட பிரிவு:* விஜிதா ரகுநாதன் - வடமராட்சி மதத்திய மகளிர் கல்லூரி, பிரி யந்தினி கருணாகரன் - விக்னேஸ்வரக் கல் லூரி, றம்சிக்கா இராசரத்தினம் - விக்னேஸ் வரக் கல்லூரி.

*திறந்த பிரிவு:* திருமதி அனந்தராணி நாகேந்திரன் - நெல்லியடி, நடேசு ஆத வன் - அல்வாய், க.பாலன் - இமையா ணன். (202-70)

# குழுப் புகைப்படங்களை பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

நுண்கலைப்பீட 2002/2003 வருட மாணவர்களின் துறைசார்ந்த குழுப்படங் கள் வந்து சேர்ந்துள்ளன என்று கவின்கலை மன்றம் தெரிவித்துள்ளது.

பதிவுகளை மேற்கொண்டவர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை வருகை தந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

# கோப்பாய் மருத்துவமனையில் 5 மருத்துவர்கள் பணியில்

கோப்பாய்,ஏப்.17

கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் தற்போது 5 மருத்துவர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

அண்மையில் புதிய பட்டதாரி மருத்து வர்கள் இருவர் நியமனம் பெற்றுள்ளனர். மேலும் இரண்டு பதிவுசெய்யப்பட்ட மருத் துவ அதிகாரிகளும் பல் மருத்துவர் ஒருவ ரும் கடமையாற்றி வருகின்றனர்.

இதன்மூலம் நீண்டகாலமாக நிலவி வந்த மருத்துவர் பற்றாக்குறை நீங்கியுள்ள தாகவும் தற்போது அதிகளவிலான நோயா ளிகள் சிகிச்சைக்கு வந்து பயன்பெறுவ தையும் அவதானிக்கலாம். (202-72)

# சுகாதாரமற்ற முறையில் இனிப்பு விற்பனை செய்த வியாபாரி மீது வழக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.17

ஆலய உற்சவ காலத்தில் சுகாதாரமற்ற முறையில் இனிப்பு வகைகள் விற்பனை செய்த நபர் மீது சாவகச்சேரி நீதிமன்றில் சுகாதாரப் பகுதியினர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயப் பங்குனித் திங்கள் உற் சவத்தின்போது தற்காலிகமாக அமைக்கப் பட்ட விற்பனை நிலையத்தில் சுகாதார மற்ற இனிபபு பண்டங்களை விற்பனை செய்த வியாபாரி மீதே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டது. (202-207)



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் கலைப்பீட மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு தொகுக்கப் பட்ட 'பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதி அண்மையில் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் முதற்பிரதியை கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா வழங்க பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் பெற் றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(202)*

# உலக புத்தக தினத்தை முன்னிட்டு வலி.தெற்கில் பல்வேறு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஏப்.17

எதிர்வரும் 23 ஆம் திகதி உலக புத்தக தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபை யின் பிரதேச பாடசாலைச் சமூகத்தினர், சன சமூக நிலையத்தினர், இலக்கிய வாதிகள் ஆகியோருடன் இணைந்து பல்வேறு நிகழ் வுகளை நடத்தவுள்ளனர்.

''பூரண மனிதனாகத் தேவையானது'' என்ற தலைப்பில் வாசித்தலே, நேசித்தலே, பூசித்தலே என நான்கு கோணங்களில் பாட சாலை அணிகள் வாதிட ஏ.அனுசாந்தன் நடுவராகப் பங்கேற்கும் பட்டிமன்றமும்-

''மனித மேம்பாட்டுக்கு வளமான வாசிப்பே துணை செய்யும்'' என்ற தலைப் பில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் கு.றஜீபன், கவிஞர் துரையர், பா.மகாலிங்க சிவம், திருமதி.பாகீரதி கணேசதுரை, இயல் வாணன் ஆகியோர் பங்கேற்கும் கவியரங் கமும்-

பிரதேச சபை உத்தியோகத்தர்களின் ''புத்தகம் தரும் வித்தகம்'' வில்லிசை நிகழ் வும் பிரதேச வாசகர் வட்ட வெளியீ டான ''வெள்ளிமலை'' 3ஆவது இதழ் வெளியீ டும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 24, 25, 26, 27ஆம் திகதி களில் உடுவில் பொதுநூலகத்தில் நடை பெறும் புத்தகக் கண்காட்சியில் யாழ்.பிர பல புத்தகசாலைகளின் விற்பனைக் கூடங் களும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என பிரதேச வாசகர் வட்டச் செயலாளர் தெரி வித்தார். (202-86)

# நெடுந்தீவுக்கான மின்சார விநியோகத்தை மேம்படுத்தும் திட்டங்கள் கிடப்பிலா?

யாழ்ப்பாணம்,ஏப்.17

நெடுந்தீவு பிரதேசத்தின் மின்சார விநி யோகத்தை மேம்படுத்தவென கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் திட்டங்கள் வகுக் கப்பட்டிருந்தன. எனினும் இன்று வரை அவை செயற்படுத்தப்படாமல் கிடப்பில் உள்ளன எனப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

2004ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத் தப்பட்ட வரவு - செலவு நிதியில் மின்சார விநியோக விஸ்தரிப்புக்கென ஒரு லட்சம் ரூபாவும் வெல்லை வீதி செபநாயகபுரம் வீதி களுக்கான மின்விநியோகத்திற்கெனவும் பெருக்கடி வீதியில் மின்கம்பங்களை மாற்றியமைப்பதற்கென 5 லட்சம் ரூபா வும் ஒதுக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத் தப்பட்ட வரவு - செலவு நிதியில் தாழைத் துறை, வெல்லை, சிக்கிரியான் பள்ளம் வீதி களுக்கான மின்சார விஸ்தரிப்புக்கென 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய காசோலைகளும் மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

அத்துடன் 'கமநெகும' திட்டத்தின்கீழ் பெருக்கடி வீதி மின்விநியோக விஸ்தரிப்புக் கென 1.25 மில்லியன் ரூபா நிதி 2007ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் நிதி இதுவரை விடுக்கப்படவில்லை எனவும் -

மின் விஸ்தரிப்புக்கென மின்கம்பங்கள் பலாலிக்கு வந்து சேர்ந்தபோதும் அவை நெடுந்தீவுக்கு எடுத்துவராத நிலையில் நீண்டநாள்களாகக் கிடக்கின்றன எனவும் தெரியவருகின்றது. (202-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை- 2006 யாழ்.மாவட்ட மதிப்பீட்டு விவரம்

யாழ்ப்பாணம், ஏப்.17

2006ஆம் ஆண்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் முடிவுகளில் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பாட சாலைகளின் பெறுபேறுகளை மாகாண கல்வி அமைச்சு வலய ரீதியாக மதிப்பீடு செய்து புள்ளி விவரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. தென்மராட்சி வலயம் - 1694, தீவக வலயம் - 529 என்ற ரீதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகள் குறித்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு வலயரீதியாக வெளியிட்ட மதிப்பீட்டுப் புள்ளி விவரத்தில் வலி காமம், யாழ்ப்பாணம், வடமராட்சி வலயங்களின் விவரம் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

ஏனைய இரு வலயங்களினதும் புள்ளி விவரம் வருமாறு:

### தென்மராட்சி வலயம்

| பாடப்பிரிவு | பாடம் | மாணவர் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தோற்றியோர் | ஏ | பி | சி | எஸ் | சித்தி | சித்தி வீதம் |
| விஞ்ஞானம் | பௌதிகவியல் | 119 | 5 | 9 | 27 | 31 | 72 | 61 |
| | இரசாயனவியல் | 117 | 4 | 12 | 24 | 27 | 67 | 57 |
| | உயிரியல் | 37 | 1 | 6 | 9 | 10 | 26 | 70 |
| | விவசாய விஞ். | x | x | x | x | x | x | x |
| | இணைந்தகணிதம் | 83 | 8 | 8 | 16 | 18 | 50 | 60 |
| வர்த்தகம் | பொருளியல் | 147 | 4 | 16 | 43 | 56 | 119 | 81 |
| | கணக்கியல் | 89 | 11 | 9 | 35 | 17 | 72 | 81 |
| | வணிகக் கல்வி | 89 | 8 | 19 | 27 | 26 | 80 | 90 |
| | புள்ளிவிவரவியல் | x | x | x | x | x | x | x |
| கலை | தமிழ் | 449 | 43 | 111 | 171 | 103 | 428 | 95 |
| | புவியியல் | 233 | 2 | 24 | 131 | 66 | 223 | 96 |
| | மெய்.விஞ்ஞானம் | 37 | 3 | 5 | 11 | 10 | 29 | 78 |
| | இந்து நாகரிகம் | 308 | 28 | 79 | 111 | 72 | 290 | 94 |
| | கிறீஸ்தவ நாகரிகம் | 8 | 3 | 2 | 1 | 2 | 8 | 100 |
| | இந்துசமயம் | 8 | 1 | 6 | 1 | 0 | 8 | 100 |
| | நாடகமும் அரங். | 16 | 3 | 7 | 6 | 0 | 16 | 100 |
| | சித்திரம் | 4 | 0 | 1 | 1 | 1 | 3 | 75 |
| | சங்கீதம் | 48 | 5 | 12 | 18 | 8 | 43 | 90 |
| | நடனம் | 15 | 1 | 2 | 9 | 2 | 14 | 93 |
| | மனைப்பொருளியல் | 4 | 0 | 0 | 3 | 0 | 3 | 75 |
| | வரலாறு | 130 | 19 | 47 | 32 | 25 | 123 | 95 |
| | ஆங்கில இலக்கியம் | x | x | x | x | x | x | x |
| | அரசியல் விஞ். | 18 | 2 | 1 | 8 | 7 | 18 | 100 |
| | சமஸ்கிருதம் | x | x | x | x | x | x | x |
| | ஆங்கிலம் (பொது) | 585 | 0 | 0 | 6 | 12 | 18 | 3 |

### தீவக வலயம்

| பாடப்பிரிவு | பாடம் | மாணவர் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தோற்றியோர் | ஏ | பி | சி | எஸ் | சித்தி | சித்தி வீதம் |
| விஞ்ஞானம் | பௌதிகவியல் | 20 | 1 | 0 | 3 | 6 | 10 | 50 |
| | இராசயனவியல் | 20 | 0 | 1 | 1 | 4 | 6 | 30 |
| | உயிரியல் | 6 | 0 | 0 | 3 | 1 | 4 | 67 |
| | விவசாய விஞ். | x | x | x | x | x | x | x |
| | இணைந்தகணிதம் | 14 | 1 | 3 | 2 | 3 | 9 | 64 |
| வர்த்தகம் | பொருளியல் | 65 | 1 | 3 | 22 | 25 | 51 | 78 |
| | கணக்கியல் | 42 | 5 | 9 | 11 | 11 | 36 | 86 |
| | வணிகக்கல்வி | 42 | 2 | 5 | 13 | 13 | 33 | 79 |
| | புள்ளிவிவரவியல் | x | x | x | x | x | x | x |
| கலை | தமிழ் | 128 | 12 | 30 | 57 | 24 | 123 | 96 |
| | புவியியல் | 19 | 0 | 1 | 12 | 5 | 18 | 95 |
| | மெய்யியல் விஞ். | 24 | 3 | 5 | 11 | 2 | 21 | 88 |
| | இந்து நாகரிகம் | 92 | 8 | 37 | 35 | 10 | 90 | 98 |
| | கிறிஸ்தவ நாகரிகம் | 39 | 14 | 22 | 3 | 0 | 39 | 100 |
| | இந்துசமயம் | x | x | x | x | x | x | x |
| | நாடகமும் அரங். | 11 | 0 | 6 | 5 | 0 | 11 | 100 |
| | சித்திரம் | 3 | 0 | 2 | 1 | 0 | 3 | 100 |
| | சங்கீதம் | 4 | 0 | 2 | 2 | 0 | 4 | 100 |
| | நடனம் | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 100 |
| | மனைப்பொருளியல் | 4 | 0 | 1 | 1 | 0 | 2 | 50 |
| | வரலாறு | x | x | x | x | x | x | x |
| | ஆங்கில இலக்கியம் | x | x | x | x | x | x | x |
| | அரசியல் விஞ்ஞா. | 69 | 9 | 8 | 34 | 17 | 68 | 99 |
| | சமஸ்கிருதம் | x | x | x | x | x | x | x |

# பாலைவனத்தில் ஒரு பசுஞ்சோலையாக வேலணை மத்திய கல்லூரி திகழ்கின்றது

## கல்விச் சமூகத்தின் அர்ப்பணிப்பான சேவைக்கு யாழ்.அரச அதிபர் பாராட்டு

வேலணை, ஏப்.17

பாலைவனத்தில் ஒரு பசுஞ்சோலை யாக செழுமையுடன் வேலணை மத்திய கல்லூரி திகழ்கின்றது. இதன் உயர்வுக்குக் கல்விச் சமூகத்தின் அர்ப்பணிப்பான சேவையே காரணம். கல்லூரி தொடர்ந்தும் மேம்பாடடைய சமூகம் பாடுபட வேண்டும்.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பாராட்டுத் தெரிவித்தார்.

அண்மையில் வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்ற தீவக வலய தமிழ் மொழித்தின விழாவில் பிரதம விருந்தினரா கக்கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:

பாலைவனத்தில் ஒரு பசுஞ்சோலை போல வேலணை மத்திய கல்லூரி இன்று திகழ்கிறது.

இன்று தீவகத்தில் மக்கள் வெளியேறி வெறிச்சோடிப் போயுள்ளது. இந்நிலையிலும் இந்த வேலணை மத்திய கல்லூரி செழுமை மிக்கதாக - பாலைவனத்தில் ஒரு பசுஞ் சோலை என - காணப்படுகிறது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மேலும் எமது கல்விச் சமூகமான ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாகிகள் முயற்சி யால் தமிழ் மொழித் தின விழாக்கள் ஒழுங்கு செய்யப்படுவதும். சிறப்பு நிகழ்வுகள் மேடை ஏற்றப்படுவதும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

**எமது சமூகத்தில் பாரம்பரியத்தை தொடர்ந்து பேண வேண்டும்.**

எமது பிரதேசத்தின் இன்றைய நிலையில் - இவ்வளவு அவலத்திலும் ஓரளவேனும் தாக்குபிடித்து நிற்பதற்கு எமது சமூகத்தின் கல்வி, கலை, விளையாட்டு எனும் மூன்றும் பாடங்களில் வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும்.

எமது சமூகத்தில் காலங்காலமாக கட்டிக் காப்பற்றப்பட்டு வரும் கல்விப் பாரம்பரியத்தை தொடர்ந்து பேணுவதற்கு கல்விச் சமூகம் பாடுபடவேண்டும்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பலாலி ஆசிரிரிய கலா சாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு உரை யாற்று கையில்

தமிழ் மொழித்தின விழாக்கள் எமது சமூகத்தின் அவசிய இடத்தைப் பெறுகின்றன. பாடசாலைகள், கோட்டங்கள், வலயங்கள், மாகாண மட்டத்தில் எல்லாம் தமிழ் மொழி தின விழாக்கள் எடுக்கப்பட வேண்டும். சமூகத்தில் எமது கலைகளும் பாரம்பரியங்களும் பேணி வளர்க்க இவ்விழாக்கள் உதவுகின்றன. உலகில் 70இற்கு மேற்பட்ட நாடுகளில் தமிழர் வாழ்ந்தாலும் தமிழ் மொழிக்கு எங்கும் உரிய ஆதரவு கிடைக்கவில்லை. தமிழை நமே வளர்க்க வேண்டும்.

மாணவர்கள் தமது கல்வியை தமிழ் மொழியிலே கற்றுக் கொள்ள வேண்டும். தாய்மொழியில் கற்கும் போது அதிக விளக் கமும் உரிய கற்றல் பேறும் ஏற்பட முடியும். எனினும் ஏனைய மொழிகளைக் கற்றல் வேண்டும். இன்றைய உலகில் பல்வேறு தொடர்புகள் அறிவியல் தேட்டங்களுக்கு வெளிநாட்டு மொழி அறிவு அவசியமாகும். இதனால் எமது மாணவர் தமிழ் மொழியையும், ஆங்கிலம் போன்ற பிற மொழியையும் கற்க வேண்டும் - என்றார். (202-127)

# 2007 ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.17

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்தில் வெளியாகின.

குடாநாட்டில் உள்ள - அந்தந்தப் பாட சாலைகளின் - அதிபர் களால் 'உதயனுக்கு' வழங்கப்பட்ட பரீட்சை முடிவுகளில் சில வருமாறு:-

**கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்**

நவரத்தினம் கோகினி - 9ஏபி, குலராசா சுகந்தினி - 8ஏபிஎஸ், நாகராசா நீருஷா - 8ஏ2எஸ், நடராசா டயாளினி - 7ஏபி2சி, விமலராசா கௌசலா - 5ஏபிசி3எஸ், நடராசா நியூதா - 3ஏ5பிசிஎஸ், வேலுப்பிள்ளை கயூரா - 3ஏ2பி4சி2எஸ், ராசேந்திரம் நிசாந்தன் - 2ஏ4சிஎஸ்,

**வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி**

ச.மங்கையற்கரசி - 7ஏ2பிசி, ம.தினேஷ் - 4ஏ4பிசிஎஸ், வி.சக்திதாஸ் - 4ஏ4பிசிஎஸ், ஸ்ரீ.கவிதா - 2ஏபி2சி2எஸ், ச.வசிகரன் - 2ஏ4பி3சி, ஜெ.செந்தில்குமரன் - ஏ2பி3சிஎஸ்.

# கோப்பாய் பிரதேசத்தில் கச்சான் பயிர்ச் செய்கை ஓரளவு வெற்றி

கோப்பாய், ஏப்.17

கோப்பாய் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த கச்சான் பயிர்ச் செய்கை ஓரளவு வெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய கால நிலையே இதற்கு காரணமெனத் தெரிவித்துள்ள விவாயிகள் எதிர்காலத்தில் கச்சான் பயிரிடலில் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் மேலும் பல விவசாயிகள் சோளம் பயிரிடலிலும் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.



வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளிகளின் கலைத்திறன் காண்விழா கடந்த 9ஆம் திகதி தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளான கிராமிய நடனம், தொப்பி வியாபாரி நாடகம், ஆகியவற்றை முதலிரு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் மாணவர்களையும் மூன்றாவது படத்தில் காணலாம். (படம்:சுந்தர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 3944

# பாவப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு பாரத மாதாவின் பதில்தான் என்ன?

இந்திய அரசுக்கு எதிராக மிக முக்கிய குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருக்கின்றார்கள் விடுதலைப் புலிகள்.

"இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும். தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்." என்று இந்திய அரசு விடுக்கும் அறிக்கைகள் வெறும் வாய்ச் சொற்களே தவிர வேறெதுவும் இல்லை என்றுதான் தமிழ்மக்கள் பார்க்கின்றனர். - இவ்வாறு நேரடியாகவே இந்தியா மீது குற்றப்பத்திரம் வாசித்துள்ளார்கள் புலிகள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உத்தியோக பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' சஞ்சிகையின் ஆசிரிய தலையங்கம் இப்படி அப்பட்டமாக இந்தியாவைக் குறை கூறியிருக்கின்றது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால் இலங்கையில் போர் நிறுத்தப்படவேண்டும், அரசியல் தீர்வு காணப்படவேண்டும், சமாதானம் உருவாக வேண்டும் என்றெல்லாம் இந்தியா கூறுவது வெறும் வாய்ப்பந்தல் நடிப்பு; பசப்பு வார்த்தை. ஆனால் இந்தியாவின் உள்ளக் கிடக்கையோ வேறு - என்பதையே புலிகள் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு தத்தளிக்கும் இலங்கை அரசுக்கு - அதன் இன அழிப்புப் போருக்கு - இராணுவ உதவிகள் புரிந்து, தமிழ் மக்களைக் கோபத்துக்கு உள்ளாக்கியுள்ள இந்திய அரசு, தனது இச் செயற்பாடு மூலம் சர்வதேச சமூகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என்றும் புலிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ சஞ்சிகையில் அதன் ஆசிரிய தலையங்கமாகவே இக்கருத்து முன்வைக்கப்பட்டிருப்பதால் அது புலிகளின் உத்தியோக பூர்வ கருத்தியலாகவே கருதப்பட்டு கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

இதற்கு அப்பால் இன்னொரு விடயத்தையும் புலிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். அதுவும் ஊன்றிக் கவனிக்கப்படவேண்டியது.

இலங்கை அரசின் போரியல் போக்குக்கு ஒத்தாசையாக இருக்கும் அதேசமயம், இலங்கை அரசு ஆக்கிரமித்த தமிழர் நிலப் பகுதிகளில் பொருண்மிய நன்மை பெறும் சிறுமைத் தனத்திலும் இந்திய அரசு அக்கறை காட்டி வருகின்றது எனப் புலிகள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பகுதியைப் படைகள் ஆக்கிரமித்த கையோடு அங்கே ஓர் அனல் மின் நிலையத்தை இலங்கை அரசுடன் இணைந்து அமைப்பதற்கு இந்திய அரசு உடன்பட்டமையையும் புலிகள் மேற்கோள் காட்டியிருக்கின்றனர்.

'எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்' - என்ற கணக்கில் இந்தியா நடந்து கொள்கின்றதோ என்ற சிந்தனைப் போக்கைப் புலிகளின் இந்தக் குற்றச்சாட்டு ஏற்படுத்துகின்றது.

இக்குற்றச்சாட்டுகள் விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டாலும் இத்தகைய சந்தேகமும் சிந்தனையோட்டமும் சராசரி ஈழத் தமிழர் ஒவ்வொருவரினதும் மனதிலும் இழையோடுகின்றது என்பதை இந்தியா புரிந்துகொள்ளவேண்டும்.

புலிகளின் குற்றச்சாட்டில் உண்மை இருக்கலாம். இல்லாமல் இருக்கலாம். அவை வெறும் அபாண்டக் குற்றச்சாட்டுதலாகக் கூட இருக்கலாம்.

ஆனால் இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியே செயற்பட வேண்டும். 'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை' போல இரண்டுங்கெட்டானாக அது நடந்துகொள்ளக்கூடாது.

தாய் - சேய் போல இந்தியாவின் தென்னகத் தமிழர்களும் ஈழத் தமிழர்களும் தொப்புள்கொடி உறவுமுறை கொண்டவர்கள். 'தானாடாவிட்டாலும் தசை ஆடும்' என்பதுபோல ஈழத்தமிழர்களுக்காகத் தென்னகம் கிளர்ந்தெழும் சூழல் நிலவும் இச்சமயத்தில், இந்தியா இரண்டு பக்கமும் சமாளிப்பது போலப் போலி வேடமிட்டு நடிக்கக்கூடாது; புரட்டுப் பண்ணக்கூடாது.

இலங்கைப் படைகளுக்குப் பயிற்சி உதவி, ஆயுத, தளபாட விநியோகம், கூட்டுக் கடல் ரோந்து, செய்மதி மூலமான உளவுத் தகவல் சேகரிப்பும் பரிமாற்றமும், வான் பாதுகாப்புத் திட்டம், இலங்கை உயர் இராணுவ அதிகாரிகளுக்கு கௌரவ வரவேற்பு என்று நீண்டு செல்லும் இந்தியாவின் - இலங்கைக்கான - உதவித் திட்டங்கள் இலங்கை விவகாரத்தில் பாரதத்தின் பங்களிப்புத் தொடர்பாக ஈழத் தமிழர்களுக்கு சந்தேகத்தைத் தருவனவாக மட்டுமல்லாமல், தமக்கு எதிராக அயல் வல்லாதிக்கம் பெரும் துரோகம் இழைப்பதான உணர்வு நிலையையும் ஏற்படுத்தி நிற்கின்றன.

'புலிகளை அழித்துத் தமிழர்களுக்குத் தீர்வு' என்ற பெயரில் பௌத்த - சிங்களப் பேரினவாதம் வரித்துக் கொண்டிருக்கும் அடக்குமுறைக் கொள்கைப் போக்கை இந்தியாவும் சுவீகரித்துக் கொண்டு விட்டதோ என்பது தான் ஈழத்தில் மட்டுமல்லாமல், உலகெங்கும் வாழும் தமிழர்களின் மனதில் இன்று நெருடும் பிரதான கேள்வியாகும்.

பாரத மாதாவே! பாவப்பட்ட இந்த ஈழத் தமிழர்களுக்கான உனது பதில்தான் என்னவோ......?

## இளம் விருது வழங்கல், குறுநாடகப் போட்டிகளுக்கு யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளும் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.17

இளைஞர் விவகார அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் 2008ஆம் ஆண்டுக்கான மாவட்ட இளம் விருது வழங்கல் போட்டி, மாவட்ட குறுநாடகப் போட்டி ஆகியவற்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்போட்டிகளுக்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 15-29 வயதுக்கிடைப்பட்ட இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.

எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் 'உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நாவல், சிறுகதை, கவிதை, பொதுக் கட்டுரை, பாடல் இயற்றுதல், சாஸ்திரிய இசை, மேற்கத்தைய இசை, மேளம் இசை, மக்கள் பாடல், சித்திரம், சிலை/சிற்பம், புகைப்படத்துறை, விசேட நாடகத் துறை, செயற்பாட்டு நாடகம், ஒலிபரப்புத்துறை, இளம் பாடகர்கள், பரத நாட்டியம், கதக், புதிய படைப்புகள், இளம் நாடகத்துறை ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மேலதிக விவரங்களை 021 222 2526 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (202)

## நெடுந்தீவு வீடமைப்புப் பணி அடுத்த மாதம் பூர்த்தியாகும்

'நிகொட்' அமைப்பினால் நெடுந்தீவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் 44 வீடுகளும் அடுத்த மாதத்துக்குள் கட்டி முடிக்கப்படும் என அந்த அமைப்பின் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே கட்டடப் பொருள்கள் தட்டுப்பாடு காரணமாகவும் சிமெந்து கிடைப்பதில் ஏற்பட்ட தடங்களினாலும் அவ் வீடுகள் கட்டி முடிக்கப்படாதிருந்தன. மேற்படி வீடுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 500 பைக்கெற் சிமெந்து நெடுந்தீவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நிக்கொட் II திட்டத்தின்கீழ் சிமெந்து வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதெனவும் இதற்கென வழங்கப்பட்ட 12.3 மில்லியன் ரூபாவில் 6.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (202-111)

## பல்லி விழுந்த தண்ணீரில் தேநீர் தயாரித்து அருந்திய பெண் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஏப்.17

மூடி இல்லாத கேத்திலில் கொதிக்க வைத்த தண்ணீருக்குள் பல்லி வீழ்ந்ததை அறியாமல் தேநீர் தயாரித்து அருந்திய குடும்பப் பெண் மயங்கிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை மட்டுவில் தெற்கில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை செல்வராணி (வயது 59) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (202-207)

## புகையிரத ஆணைச்சீட்டு விநியோகம்: புதிய சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஏப் 17

கப்பலில் அல்லது விமானத்தில் பயணிக்கும் யாழ்.மாவட்ட அரச அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட புகையிரத ஆணைச்சீட்டு விநியோகம் தொடர்பான புதிய சுற்றறிக்கை மாகாண பிரதம செயலாளரினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக் கப்பட்டுள்ளது.

மாகாணத் திறைசேரியினால் கடந்த வருடம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கப்பலில் அல்லது விமானத்தில் பயணிக்கும் யாழ். மாவட்ட அரச அலுவலர், பயணத்தின் பின்னர் அவ்வருடத்திற்குரிய புகையிரதச் ஆணைச்சீட்டுக்களுக்குரிய (மூன்று சோடி) தொகையினை அல்லது பயணக் கட்டணத் தொகையினை மீளப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மாகாண திறைசேரியினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பிரகாரம் வருட இறுதியில் பயன்படுத்தாமல் இருக்கும் புகையிரத ஆணைச் சீட்டுக்களை ஒரே தடவையில் பெற்று கப்பலில் பயணம் செய்து ஏற்பட்ட செலவின் ஒரு பகுதியினை மீளப் பெற முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வருட ஆரம்பத்தில் ஒரே தடவையில் மூன்று சோடி புகையிரத ஆணைச் சீட்டுக்களைப் பெற்று அதற்கென பெறுமதியினை மீளப்பெற்ற உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராசா அறிவித்துள்ளார். (202-207)

## தலித்துகள், பிற்பட்டோருக்கு உரிமை வழங்கியதில் நேரு குடும்பத்திற்கு பங்கில்லை என்கிறார் மாயாவதி

லக்னோ, ஏப்ரல் 17



தலித்துக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு உரிமைகள் வழங்கியதில் நேரு குடும்பத்துக்குப் பங்கில்லை என்று உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி கூறியுள்ளார்.

அம்பேத்தகர் பூங்காவை லக்னௌவில் கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்துப் பேசிய அவர், மேலும் கூறியதாவது:

தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு கிடைத்துள்ள உரிமைகள் அம்பேத்தகர் முயற்சியால் தான் கிடைத்தன. நேரு குடும்பத்திற்கு இதில் எந்தப் பங்கும் இல்லை.

அரசியல்சட்ட நிர்ணய சபையில் அம்பேத்தகர் உறுப்பினராக வருவதைத் தடுக்க காங்கிரஸ் கட்சி சதி செய்தது. இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்தபோது, அம்பேத்கரைப் பிரதிநிதியாகக் கொண்ட மேற்கு வங்கத்தின் ஒரு பகுதியை பாகிஸ்தானுக்குக் கொடுத்தது காங்கிரஸ். அந்தப் பகுதியில் 42 சதவீதம் முஸ்லிம்களும் 58 சதவீதம் இந்துக்களும் வசித்தனர். எனினும் அப்பகுதியை பாகிஸ்தானுக்கு காங்கிரஸ் கொடுத்தது. இதன் மூலம் இந்திய அரசியல்சட்ட நிர்ணய சபையில் அம்பேத்கர் உறுப்பினர் ஆவதைத் தடுத்துவிடலாம் என்று காங்கிரஸ் கருதியது.

இதையடுத்து, இங்கிலாந்து அம்பேத்கர் அந்நாட்டு அரசிடம் இதுபற்றி முறையிட்டார். அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கரை உறுப்பினராக்கினால்தான் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவோம் என்று காங்கிரஸ் தலைமைக்கு இங்கிலாந்து அரசு நிபந்தனை விதித்தது. இதன் பின்னர் புனேயில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1947 ஜூலை 9ஆம் திகதி அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினரானார் அம்பேத்கர். ஏனவே காங்கிரஸிடம் பகுஜன் சமாஜ் கட்சியினர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

பாரதிய ஜனதா பிரசாரம் செய்யும் இந்துத்துவக் கொள்கையின் அடிப்படையில் இல்லாமல், மதச்சார்பற்ற அரசியல் சட்டம் எழுதப்பட்டதற்கு காரணம் அம்பேத்கர்தான்.

தலித்துக்களுக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தில் எழுதியது அம்பேத்கர்தான்.

உத்தரப்பிரதேசத்தில் ஆட்சியில் இருந்து சமாஜ்வாதி கட்சி, அம்பேத்கர் பூங்காவை பராமரிக்கவில்லை. அதை இடித்துவிட திட்டமிட்டது. தற்போது நாம் அந்தப் பூங்காவைப் புதுப்பித்துள்ளோம் - என்றார் மாயாவதி.

## நாச்சிமார்கோயில் குளம் புனரமைக்கப்பட்டுள்ளது

கோப்பாய், ஏப்.17

கோப்பாய் வடக்கு நாச்சிமார் கோயில் குளம் உலக உணவுத் திட்டத்தின் ஆதரவோடு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் கோடை காலத்திலும் கிணறுகளின் நீர் மட்டம் குறையாமல் நீர்ப்பாசனம் செய்யும் வசதி ஏற்பட்டுள்ளதாக மகிழ்ச்சி தெரிவித் துள்ளனர்.

எனினும் இவற்றிற்கு நீரைக் கொண்டு வரும் வாய்க்கால்கள் எவையும் உரிய முறையில் பராமரிப்பு செய்யப்படவில்லையென விவசாயிகள் சுட்டிக்காட்டி கவலை வெளியிட்டுள்ளனர். (202-72)

## நீதிமன்றத்தின் கட்டளையை மீறியதாக கல்லூரி அதிபர் ரொக்கப் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

'அமெரிக்கன் இலங்கை மிஷன்' வழக்குத் தொடர்பான சர்ச்சை யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை நிலுவையில் இருக்கத்தக்கதாக, இந்த வழக்கை ஒட்டி நீதிமன்றம் விடுத்த கட்டாணையை மீறிச் செயற்பட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிராணி மில்ஸ், ஐம்பதாயிரம் ரூபா ரொக்கப்பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்டார்.

மேற்படி அமெரிக்கன் இலங்கை மிஷனும் அதன் பொருளாளரும் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கை ஒட்டி 'அமெரிக்கன் இலங்கை மிஷன்' என்ற பெயரை வேறு ஆள்கள் பயன்படுத்தக்கூடாது என யாழ்.மாவட்ட நீதிமன்றம் கட்டாணை ஒன்று பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவை மீறிச் செயற்பட்டதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்தார் எனத் தமக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை ஒட்டி, திருமதி சிராணி மில்ஸ், அண்மையில் இந்த வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாட்சிக் கூண்டில் ஏறி சாட்சியம் அளித்தார்.

அப்போது, தாம் நீதிமன்றுக்கு முன்னர் வழங்கிய சத்தியக்கூற்று ஒன்றில் தாம் பொய் விடயங்களை விவரித்துள்ளார் என்பதை அவர் ஒப்புக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் செயற்பாட்டுக்காக அவர் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து அன்றைய நீதிமன்ற நிகழ்ச்சிப் பதிவுக் குறிப்பு தயாரான பின்னர் தீர்மானிக்கப்படும் என அறிவித்த யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, அதுவரை அவரை ஐம்பதாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

வழக்காளிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் இராஜரட்ணம், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் சட்டத்தரணி வி.ரி. சிவலிங்கத்தின் அனுசரணையுடனும் -

எதிராளிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எஸ்.இரட்ணவேல், சட்டத்தரணி நா.தம்பிமுத்துவின் அனுசரணையுடனும் - ஆஜரானார்கள்.(அ-உ)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை 06 | 18.04.2008 வெள்ளிக்கிழமை |
| திதி: திரயோதசி | பி.ப. 01.38 வரை |
| நட்சத்திரம் : | உத்தரம் பி.ப.12.13வரை |
| சுபநேரம் : | 06.02 - 07.32 |
| ராகுகாலம் : | 10.32 - 12.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, ஏப் 17

வலி.தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேசக செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவை பெற்று வருபவர்களுக்கான ஏப்ரல் மாதத்துக்கான கொடுப்பனவு அந்தந்த தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை- இப் பிரிவில் இக்கொடுப்பனவு பெற்றுவரும் புற்றுநோயளர்கள், காசநோயளர்கள் மற்றும் தொழுநோயாளர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவும் உரிய தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.காச நோயளர்கள் தாம் பெற்று வரும் சிகிச்சைக்கான மருத்துவ சான்றிதழ் அட்டையைப் பிரதேச செயலகத்தில் மாதம் தோறும் சமர்ப் பிக்க வேண்டும் என்று பிரிவு சமூக சேவை உத்தியோகத்தர் அறிவுறுத்தியுள்ளார். (202-135)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியலீலாவதி ஸ்ரீதரன்



பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலீலாவதி ஸ்ரீதரன் அவர்கள் 15.04.2008 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காசிநாதர் ஸ்ரீதரன் (கப்பற்பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும் பன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (மலாயா ஓய்வூதியர்)- செல்வநாயகி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான காசிநாதர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் குழகன் (விற்பனை பிரதிநிதி, சிலிங்கோ நிறுவனம்), வாமி ஆகியோரின் பாசமிகு தாயும் திருமதி சிவஞானமலர் விசுவநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியை), நந்தீஸ்வரா் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தங்கையும் சசிதரனின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.04.2008) புதன்கிழமை கல்கிசையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காசிநாதர் ஸ்ரீதரன் (கணவர்)*
24 5/3, Madanghawathe Lane,
Wellawathe
தொலைபேசி: *0112361281.*

தகவல்:
நந்தினி சங்கரப்பிள்ளை
(இளவாலை).

(73184)

## அப்புத்துரை நடராசா



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை நடராசா (15.04.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2008) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
வெள்ளுவடி ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
(வினோதன் மேளக்கோஷ்டி- மகன்).

(73181)

## செல்லையா பாலசுப்பிரமணியம்



காரைநகர், முல்லைப்பிலவைப் பிறப்பிடமாகவும் பதுளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலசுப்பிரமணியம் 15.04.2008 அன்று பதுளையில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் செல்லையா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் சடாச்சரம்- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் (குஞ்சரம்) அன்புக் கணவரும் பாலேஸ்வரி, பாலமனோகரன், பாலச்சந்திரன், பாலமுரளி, பாலவினோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசலிங்கத்தின் அன்பு மாமனும் கயனி, நிதுஷர்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2008) பதுளையில் நடைபெறும். முல்லைப்பிலவில் உள்ள அன்னா ரின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முல்லைப்பிலவு,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்

(7318)

## தேவராசா சந்திரா



ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவராசா சந்திரா அவர்கள் (11.04.2008) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் தேவராசாவின் (ஓய்வுபெற்ற மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், முன்னாள் பொறுப்பதிகாரி, மயிலிட்டி உப அலுவலகம்) அன்பு மனைவியும் ரஞ்சினி, பெனடிக்ற் சந்திரன், மேரிமல்லிகா, டொறிற்ரா, தேவச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் டேவிற் சந்திரன், மஞ்சுளா, சிவதாசன், திருலோகநாதன், ஜெயகௌரி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் இன்று (17.04.2008) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜோ.தேவராசா (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்.

Tell: 011-2542617. (73187)

# மருந்தாளர் தேவை

எமது வியாபார நிலையத்துக்கு மருந்தாளர் தேவை. Medical Council பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் (2007) விண்ணப்பிக்கலாம்.

இல .11, மொடேர்ன் மார்கட்,
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

(73190)

# பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமனதாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

*ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.*

உலக இரட்சகரான யேசுவே! நீசப்பாவிகளின் மேல் அளவில்லா இரக்கம் உள்ளவரே! முடியாத காரியங்களைக் கைகூடப் பண்ணியவரே எங்கள் இயேசுவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அடியாள்.

(73188)

# மோதிரம் கண்டெடுப்பு

வலி.தென்மேற்கு, ஏப் 17

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் தங்க மோதிரம் ஒன்று அங்கு கடமையாற்றும் ஊழியர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை பெறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனை தவறவிட்டவர்கள் உரிய ஆதாரத்தை காட்டி பெற்றுக் கொள்ள முடியும் என்று வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் எம்.மகேந்திரதாசன் தெரிவித்துள்ளார். (202-135)

# இருவேறு விபத்துக்களில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப் 17

இருவேறு வீதி விபத்துகளில் சிக்கி இரு மோட்டார்சைக்கிள் ஓட்டிகள் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவங்கள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

சரசாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளையில் ஓட்டிச் சென்றவர் வலிப்பு ஏற்பட்டதில் மோட்டார் சைக்கிள் மதிலுடன் மேதியது. அச்சம்பவத்தில் சோமஸ்கந்தா சர்மா மதுசூதனன் (வயது 32) என்பவரே காயமடைந்தார்.

சாவகச்சேரி டச்சு வீதியில் வீதிவளைவென்றில் திரும்பிய உழவு இயந்திரமும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த பெண் உழவு இயந்திரத்தில் அகப்பட்டு படுகாயமடைந்தார்.

தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் கடமையாற்றும் மீசாலை மேற்கைச் சேர்ந்த குலசபாநாதன் சுமதி (வயது 42) என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்தில் சிக்கிய உழவு இயந்திரம் அப்பகுதியில் உள்ள மதிலுடன் மோதியதில் மதில் சாய்ந்து வீழ்ந்துள்ளது. (202-207)


சுவாமியே சரணம் ஐயப்பா

சித்திரை மாத உத்தர நஷ்சத்திர உற்சவம்



இன்று (17.04.2008) வியாழக்கிழமை உரும்பிராய் சந்சி சிவதர்மசாஸ்த்தா திருக்கோயிலில் மாலை 5.30 மணிக்கு ருத்திரா அபிஷேகம், பூசை, பஜனை நடைபெறும்.

சரணம் ஐயப்பா

உபயம்:
க.முருகமூர்த்தி குடும்பம்,
உரும்பிராய்.கிழக்கு.

ஸ்தானிகர், ஆலய குருசுவாமி,
தானு-வாசுதேவஜெய வஸ்தாங்க சுவாமி.

(73182)


# காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்குத் தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. குறிப்பிடப்படும் தகைமையுடையோர் 05.05.2008 இற்கு முன் தலைவர், காரைநகர் பனை தென்னை வள அ.கூ.சங்கம், அல்வின் வீதி, காரைநகர் என்னும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

01. பதவி: பொதுமுகாமையாளர்
02. பதவி குறியீடு: 101:9 (10:7 சு.நி 108/81 இன்படி)
03. சம்பள அளவுத்திட்டம்: 10950- 13650 / 130x10- 140x10
04. வயதெல்லை: 21- 45 வரை
05. தேவைப்படும் தகைமைகள்:

1. கூட்டுறவுச் சங்க ஊழியர் 8ஆம் (புதியது 10ஆம்) சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று வருடங்களிற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு சங்க ஊழியர் 9ஆம் (புதியது 11ஆம்) சம்பளத்திட்டத்தில் அடிப்படையானதொரு பதவியில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி சான்றிதழ் அல்லது அதற்கு சமனான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிலையமொன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

3. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தர) சான்றிதழ்/ க.பொ.த. (உயர்தர) 3பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவியொன்றில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

06. அனுபவங்கள்: தங்களிடம் உள்ள அனுபவங்களை ஆதாரப்படுத்திக் குறிப்பிடவும்.

*குறிப்பு:*

1. கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
2. கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும்.
3. விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரித்து பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ வழங்கப்பட வேண்டும்.

தலைவர்,
காரைநகர் பனை தென்னை
வள அ.கூ.சங்கம்.

(சி/552449)

# மரண அறிவித்தல்

## இரத்தினம் கேதீஸ்வரன்

(தேவன்)



உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் கேதீஸ்வரன் (தேவன்) அவர்கள் (12.04.2008) சனிக்கிழமை அன்று அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் இரத்தினம்-அம்மா தம்பதியரின் அன்பு மகனும் சின்னப்பொடி- செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் தவராணியின் அன்புக் கணவரும் சோபிகா, சோனியா ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரி (பழம்), ஜெகதீஸ்வரன் (ஜெகன்), ரஞ்சன் (கனடா), ராஜேஸ்வரன் (ரவி- கனடா), குணேஸ்வரன் (குணம், ஹொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.04.2008) வியாழக்கிழமை அமெரிக்காவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சகோதரி இராஜேஸ்வரியின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

புதுமடம்,
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
இராஜேஸ்வரி
(சகோதரி).

(73192)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு நாளை வருகின்றது ஒலிம்பிக் தீபம்; பாதுகாப்பு உஷார்!

பீஜிங்கில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான ஜோதி ஓட்டம் இன்று டில்லியில் நடைபெறவுள்ளது. இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மத்திய உள்துறை அமைச்சகத்தின் உயர்மட்டக் கமிட்டி விரிவாக ஆய்வு செய்தது.

சீனத் தலைநகர் பீஜிங்கில் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. இதில் திபெத் மற்றும் தைவான் அணிகள் சேர்ந்து ஒருங்கிணைந்த சீன அணியாகக் கலந்துகொள்ளும் என சீனா அறிவித்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திபெத்தியர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். பீஜிங் ஒலிம்பிக் ஜோதி செல்லும் இடங்களில் எல்லாம் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளில் ஜோதியை அணைக்க முயற்சித்தனர். இவர்களுக்கு மனித உரிமை அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. அமெரிக்க அதிபர் புஷ் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளக்கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பிஜிங் ஒலிம்பிக் ஜோதி தனது ஆசிய பயணத்தை துவக்க உள்ளது. இன்று இந்தியத் தலைநகர் டில்லியில் ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் நடைபெறவுள்ளது. இதில் கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின், 'தங்க மங்கை' பிடி உஷா, 'பறக்கும் சீக்கியர்' மில்கா சிங்க உள்ளிட்ட விளையாட்டு பிரபலங்கள் கலந்துகொள்கின்றனர். விடுதலை கோரிப் போராடிவரும் திபெத்தியர்களுக்கு ஆதரவு தெரிவித்து இந்த ஓட்டத்தில் பங்கேற்க கால்பந்து அணியின் கப்டன் பாய்ச்சங் பூட்டியா மறுத்துவிட்டார்.

இந்நிகழ்வை திபெத்தியர்கள் இடையூறு செய்யக்கூடும் என்பதால் டில்லி முழுவதும் பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கமாண்டொ படை, டில்லி பொலிஸார், எல்லை பாதுகாப்புப் படையினர் உள்ளிட்ட 5 ஆயிரம் பேர் இப்பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஒலிம்பிக் ஓட்டப் பாதையை ஹெலிகொப்டர் மூலம் கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பீஜிங் ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்தில் சினிமா நட்சத்திரங்கள், அரசியல்வாதிகளுக்கு அழைப்பு விடுக்கவேண்டாமென மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் எம்.எஸ்.கில் அதிரடி அறிவிப்பு விடுத்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''ஒலிம்பிக் ஓட்டம் விளையாட்டு வீரர்களுக்கானது. இதில் அரசியல்வாதிகள், சினிமா நட்சத்திரங்களுக்கு இடமில்லை. மில்கா சிங் போன்றவர்கள் தான் ஜோதியை எடுத்துச்செல்ல வேண்டும். விளையாட்டு அமைச்சர் என்ற முறையில் நான் இந்த ஓட்ட நிகழ்வில் பங்கேற்பேன்' - என்றார்.

இதேவேளை, டில்லியில் நேற்று சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 30 திபெத்தியர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஒலிம்பிக் ஓட்டம் நடக்க உள்ள ராஜ்பாத் உள்ளிட்ட பாதையில் 'போலியான ஜோதியை' ஏந்திச் சென்றனர். இதனைத் தடுக்கப் பொலிஸார் 'இந்தியா கேட்' அருகே அவர்களிடம் இருந்த ஜோதியைப் பறித்து அணைத்தனர்.

இந்த சம்பவத்துக்கு பிறகு ஒலிம்பிக் ஓட்டம் நடக்கும் பாதையில் அதிகமான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.



பீஜிங் ஒலிம்பிக் போட்டிக்கு திபெத்தியர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். டில்லியில் போலியான ஒலிம்பிக் ஜோதியை ஏந்தி அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதையும், பொலிஸார் தடுக்க முற்படுவதையும் படத்தில் காணலாம்.

# இலங்கை - மேற்கிந்திய இறுதி ஆட்டத்துக்கு சீரற்ற காலநிலை மாற்றம் வைத்தது வேட்டு!

இலங்கைக்கும் - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக நேற்றுமுன்தினம் கைவிடப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய அணி முதலில் இலங்கை அணியை துடுப்பெடுத்து மாறு அழைத்தது. போட்டி ஆரம்பமாகி ஒரு விக்கெட்டை இலங்கை இழந்த நிலையில் மழை காரணமாக போட்டி நிறுத்தப்பட்டது.

10 நிமிட இடைவெளியின் பின்னர் மீண்டும் ஆரம்பமாகிய போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்டுகளை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவு அணி 18.2 ஓவர்களில் இரு விக்கெட்டுகளை இழந்து 81 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் கடும் மழை காரணமாக ஆட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது.

கடந்த திங்கள் இடம்பெற்ற இரு அணிகளுக்கான போட்டியில் இலங்கை அணி சார்பாகப் புதிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மஹேல உடவத்த 73 ஓட்டங்களை குவித்தார். இதில் 5 பவுண்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்குகின்றன. இவர் மேற்கிந்திய தீவுகளின் பந்து வீச்சாளர் ரம்டினின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய சமர கப்புகெதர, திலகரத்ன டில்ஸான் கௌசல்யா வீராரட்ண தமது அபார துடுப்பாட்டத்தின் மூலம் அணியை பலமான நிலைக்கு இட்டுச் சென்றனர்.

இதன்படி சாமர கப்புகெதர 48 ஓட்டங்களையும் திலகரட்ண டில்ஸான் 64 ஓட்டங்களையும் கௌசல்யா வீராரட்ண 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை அணித் தலைவர் மஹேல ஜயவர்த்தன மற்றும் முன்னிலை வீரர்களான சாமரசில்வா, குமார் சங்கக்கார மற்றும் ஆகியோர் குறைந்த ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் மேற்கிந்திய அணியின் பவெல், பிராவோ மற்றும் அணித் தலைவர் கிறிஸ்கெய்ல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலெடுத்து துடுப்பாடிய மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக அதன் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சற்றக்கூன் 53 பந்துகளை எதிர்கொண்டு 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இதில் 6பவுண்டரிகள், ஒரு சிக்ஸரும் அடங்குகின்றன. பந்து வீச்சில் இலங்கை அணியின் சமிந்தவாஸ், மீராண்டோ ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளைப் பெற்றனர்.

இலங்கை மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான சர்வதேச ஒருநாள் தொடரை 2 - 0 என்ற கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணி வென்று தொடரை சுவீகரித்துக் கொண்டது.

# முதன்முறையாக புனித பாப்பரசர் அமெ. விஜயம் ஜனாதிபதி புஷ் நேரில் சென்று பெருவரவேற்பு



வாஷிங்ரன்,ஏப்.17

முதலாவது உத்தியோகபூர்வ அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டு அன்றூஸ் விமானப்படை விமானத்தளத்தை வந்தடைந்த பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பர், சம்பிரதாயத்துக்கு அப்பாற்பட்ட முறையிலான ஜனாதிபதி வரவேற்பை, ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷிடமிருந்து பெற்றுள்ளார்.

பாப்பரசரின் வருகைக்காக, அன்றூஸ் விமானப் படை விமான நிலைய தார் வீதியில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் அவரது பாரியார் லோராவும் காத்திருந்தனர். பாப்பரசர் பயணித்த விமானம் வந்து தரையிறங்கியதும் திரண்டிருந்த பெருங்கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

பாப்பரசரின் வருகைக்காக வாஷிங்டனுக்கு அருகிலுள்ள அன்றூஸ் விமானப்படை விமான நிலைய வீதியின் இருமருங்கும் நூற்றுக்காணக்கானோர் காத்திருந்தனர்.

விமானத்திலிருந்து இறங்கிய பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பர் அங்கு ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், அவரது பாரியார் லோரா, புதல்வி ஜெனா ஆகியோர் தம்மைச் சந்திப்பதற்காக விமான நிலைய ஓடுதரை வழியாக வந்தபோது திரண்டிருந்த கூட்டத்தினர் கரங்களைத்தட்டி, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ஆறுநாள் விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்கா வந்தடைந்துள்ள ஆசீர்வாதப்பர், ஐ. நா. பேரவையில் உரைநிகழ்த்துவார். பின்னர் பூஜ்யம் என அழைக்கப்படும் மைதானத்தில் இவரது தலைமையில் பிரார்த்தனை கூட்டமொன்றும் நிகழும் என, விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஈராக்கிய நகரங்களில் குண்டுகள் வெடிப்பு; பெண்கள், பிள்ளைகள் உட்பட 70பேர் பலி

ஈராக்கின் மூன்று நகரங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளால், எழுபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமுற்றுள்ளனர் என அங்கிருந்து வெளியான ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சமீப வாரங்களில் இடம்பெற்றுள்ள அனர்த்தங்களில், இது ஒரு பாரிய அனர்த்தமாகும் எனப் பாதுகாப்பு வட்டாரம் அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

பாக்தாத்துக்கு வடக்கேயுள்ள பகுபாவில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில், 53 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மற்றும் 90 பேர் காயமடைந்துள்ளனர். நீதி மன்றத்துக்கு அருகிலுள்ள உணவகமொன்றுக்கு வெளியே, பஸ்ஸொன்றுக்குளிருந்து குண்டுகள் வெடித்துள்ளனவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரமாதி நகரிலுள்ள உணவகமொன்றுக்குள், தற்கொலை குண்டுதாரியொருவர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில், 53 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 8 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். பொலிஸார் இந்த உணவகத்திலேயே வழமையாக, உணவு உட்கொள்வர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

மொசூலின் வடக்கிலும், பாக்தாத்திலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். அநேகர் காயமடைந்துள்ளனர்.

பகுபா நகர குண்டு வெடிப்புகளில் மரணமானோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அப்பகுதியில் தீப்பற்றிய கார்களுக்குள்ளும் இன்னும் கருகிய சடலங்கள் கிடக்கின்றன எனவும், பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி சீனியம்மா கதிரமலை

தெல்லிப்பழை, செல்வாபுரத்தை பிறப்பிடமாகவும் 73, பெரிய தம்பிரான் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீனியம்மா கதிரமலை நேற்று (16.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரமலையின் அன்பு மனைவியும், மோகனராஜா, காலஞ்சென்ற கிருஸ்ணானந்தமூர்த்தி மற்றும் சந்திரதாஸ் (கனடா), ஜெயச்சந்திரன் (ஜேர்மனி), ஜெயகௌரி (கனடா), உமாதேவி (உமா) ஆகியோரின் அன்புத் தாயும், சிவராணி, சுமதி, சுபத்திரா (கனடா), ராஜி (ஜேர்மனி), விஜயகுமார் (பாபு-கனடா), ஜெயராமன் (S.L.T.) ஆகியோரின் அன்பு மாமியும் சனோஜன், சௌமியா, சாத்வீகன், ரஜனி, நளினி, சசிகரன், கிருஷ்ணா, ஜெனோட்டன், செபிகா, ஜெரோஷன், தினேஷ், அம்புலி, நிலா, சஞ்சிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17.04.2008) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*73, பெரியதம்பிரான் வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*
T.P. 0212225922
0777210029

தகவல்:
பிள்ளைகள்

(f)

## குடியிருப்பில் மோதியது விமானம்! 21பேர் பலி; 55 பேர் காயம்!!

கொங்கோவின் கிழக்கு நகரான கோமாவிலிருந்து புறப்பட்ட விமானமொன்று ஓடுபாதையைவிட்டு விலகி மக்கள் குடியிருப்புப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானதில் குறைந்த பட்சம் 21 பேர் பலியாகியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

விமானம் மோதி விபத்துக்குள்ளானதும் அந்த விபத்தில் பலியானோர் விமானத்தில் பயணித்தவர்களா? தரையில் இருந்தவர்களா? என்ற விவரம் உடனடியாக வெளியாகவில்லை. விபத்து தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

டிசி-9 என்னும் இந்த விமானம் கோமாவிலிருந்து மத்திய கொங்கோ நகரான கிஸான்கனியை நோக்கிப் புறப்பட்டது. எனினும் பலத்த மழையால் ஓடுதரையை விட்டு விலகி மதிலொன்றை [illegible] குடியிருப்புப் [illegible] மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



*தாயின் மடியில்*
*17.10.1943*
*இறைவன் மடியில்*
*29.04.2007*

சிவஸ்ரீ

### இரத்தினசபாபதி ஐயர் சோமஸ்கந்தக் குருக்கள்

(பிரதம குரு, வேலணை முடிப்பிள்ளையார் கோயில், உசன் கந்தசுவாமி கோயில் அர்ச்சகர், மருதனார்மடம் ஆஞ்சநேய கோயில் அர்ச்சகர்)

திதி: சித்திரை மாத பூர்வபக்க திரயோதசி

நாளை (18.04.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். *(உற்றார், உறவினர், நண்பர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

*மருதனார் மடம் ஆதீனகர்த்தா*
*இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

(73194)

*தகவல்:*
*சகோதரர்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான ஜே.வி.பி. எம்.பியை விடுவிக்குக! பொலிஸ் மா அதிபருக்கு அவசரக் கடிதம்

## முடியாது என அவர் பதில்

கொழும்பு, ஏப்.16

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகரவை விடுதலை செய்யுமாறு, விமல் வீரவன்ஸ பிரிவைச் சேர்ந்த பியசிறி விஜேநாயக்க மற்றும் அச்சல சுரங்க ஜாகொட ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேராவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதனை பொலிஸ் மா அதிபர் நிராகரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற வளாகத்திலிருந்து இரண்டு வாகனங்களைக் கடத்திச் சென்றதுடன் அங்கிருந்த ஊழியர்களைத் தாக்கியமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகரவை 17ஆம் திகதி வரை (இன்று) விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இச்சம்பவத்தால் ஜே.வி.பிக்குள் விமல் வீரவன்ஸ பிரிவினர் மீது பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே குறித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேராவுக்கு மேற்கண்ட கடிதத்தை அனுப்பியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இவர்களது இந்த வேண்டுகோள் கடிதம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா மேலும் கூறியவை வருமாறு:-

''ஜே.வி.பிக்குத் தேவையான நேரத்தில் ஒருவரைக் கைதுசெய்யவோ அல்லது விடுதலை செய்யவோ நாட்டில் சட்டம் ஒன்று நடைமுறையில் இல்லை.

''நீதிமன்றத்தின் தீர்ப்பை மறுத்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்கோ அல்லது ஜே.வி.பியினருக்கோ கிடையாது. ஜே.வி.பிக்குத் தேவையான விதத்தில் சட்டத்தை ஒருபோதும் மாற்ற முடியாது. இந்நிலையிலேதான் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரினதும் கோரிக்கையை நான் நிராகரித்துள்ளேன்'' - என்றார்.

# ஜெயராஜின் மனைவியை அரசியலுக்குள் இழுக்க முயற்சி

கொழும்பு, ஏப்.17

காலஞ்சென்ற அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் மனைவி டாக்டர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே அரசியலுக்கு வரவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விருப்பம் தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் ஜெயராஜ் மரணமானதைத் தொடர்ந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கட்டானைத் தொகுதியின் அமைப்பாளர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இதற்கு திருமதி ஜெயராஜை நியமிக்க ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# அ'புரம் விமானத்தளத் தாக்குதல் குறித்து ஐந்துபேர் அடங்கிய குழுவினர் விசாரணை

அநுராதபுரம் வான் படைத்தளத்தின் மீது கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி 21 பேரடங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அணி தாக்குதல் தொடுத்தபோது, முகாமிலிருந்த வான் படையின் ஆயுதக் களஞ்சியத்தின் திறப்பு உரிய இடத்தில் இருக்காமையால் படையினருக்கு உரிய ஆயுதங்களை வழங்க இயலாமல் போய்விட்டது என்று ஐவரடங்கிய விசாரணைக்குழு கண்டறிந்துள்ளது. அத்துடன் 20 நிமிடங்களின் பின்னரே ஆயுதக் களஞ்சியத்தின் திறப்பைக் கண்டுபிடித்துள்ளனர் எனவும் அந்த விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

அந்த ஐவரடங்கிய விசாரணைக் குழுவில் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட, மேஜர் எம்.ஏ.எம். பீரிஸ், ரியர் அட்மிரல் ஜே.எஸ். கொலம்பகே, எயார்வைஸ் மார்சல் ரவி அருந்தவநாதன், மேஜர் ஜெனரல் பீ.எல். பெர்னாண்டோ மற்றும் கொமாண்டர் கே.ஏ.எஸ். பெர்னாண்டோ ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

படையினருக்கான தேநீர் இடைவேளையின்போது விடுதலைப் புலி உறுப்பினர்கள் அநுராதபுரம் வான் படைத்தளத்திற்குள் புகுந்துள்ளனர் எனவும் விடுதலைப் புலிகளின் இரு விமானங்கள் முகாமின் மீது குண்டுகளை வீச வந்தபோது முகாமிலிருந்த விமான எதிர்ப்பு ஏவுகணைகள் செயற்படவில்லை என்றும் இக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரம் வான்படைத் தளப் பிரதேசத்தில் வெடிச்சத்தங்கள் கேட்டவுடனேயே கவச வாகனத்துடன் உடனடித் தாக்குதல் அணியொன்று அங்கு விரைந்துள்ளது. அந்தக் குழுவை 'கடெற்' அதிகாரியொருவர் வழிநடத்தியுள்ளார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதன்போது அந்த வாகனத்தில் தகவல் பரிமாற்றக் கருவியொன்று கூட இருக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

வான்படைத்தளத்தின் 3 இடங்களில் இருந்த படையினர் விடுதலைப் புலி உறுப்பினர்களின் பிரவேசத்தைத் தடுத்து நிறுத்த முடியாது போய்விட்டதால், விடுதலைப் புலிகளினால் எம்.ஐ.- 24 ரகத் தாக்குதல் ஹெலிக்கொப்டர்கள் மீது தாக்குதல் நடத்த முடிந்துள்ளது.

அநுராதபுரம் வான்படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்காக விடுதலைப் புலிகளின் 3 குழுக்கள் வந்துள்ளன எனவும் மூன்றாவது குழுவானது தந்திரிமலையூடாக வன்னிக்குத் தப்பிச்சென்றுள்ளது எனவும் இந்த விசாரணையின்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (சி)

ஸ்லோவோக்கியாவில் இருந்து

# இலங்கைக்கு ஆயுதமா? 'கிறீன்ஸ்'கட்சி எதிர்ப்பு

## லண்டனில் எதிர்த்து ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஏப்.17

இலங்கைக்கு ஸ்லோவேக்கியா ஆயுதங்களை வழங்குவதற்கு ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் 'கிறீன்ஸ்' கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஆயுத ஏற்றுமதி தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒழுக்காற்று கோவையை ஸ்லோவேக்கியா மீறியுள்ளதாக அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

25 வருடகால உள்நாட்டு யுத்தத்தில் சிக்கியுள்ள பொதுமக்களுக்கு எதிராகப் பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு ஸ்லோவேக்கியா ஒப்பந்தம் செய்துள்ளது குறித்து தான் அதிர்ச்சி அடைந்துள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஒழுக்காற்றுக் கோவையை மதிக்காமல், ஏனைய நாடுகளுக்கோ அல்லது ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கோ அறிவிக்காமல் உறுப்பு நாடுகள் ஆயுத வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்துகொள்வது குறித்து அக்கட்சி கவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனிலுள்ள ஸ்லோவேக்கியத் தூதரகத்தின் முன்னால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

அப்பொழுது தூதரக அதிகாரிகளிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.(சி)

### முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 கிலோமீற்றர் தொலைவில் உள்ள முத்தையன்கட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தளத்தை இலக்குவைத்து விமானப்படையினரின் ஜெற் விமானங்கள் தாக்குதல்கள் நடத்தின என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

இத்தாக்குதல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து நேற்றிரவு வரை எவ்வித தகவலும் வெளிவரவில்லை. (சி)

### வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதலிலேயே இரு படையினர் உயிரிழந்தனர். இதில் 12 பேர்வரை படுகாயமடைந்தனர்.

இதேசமயம் மன்னார் நரிக்குளம், வெட்டுக்குளம் பகுதிகளில் நேற்றுமாலை இடம்பெற்ற மோதல்களில் நான்கு படையினர் படுகாயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

இதேவேளை, மன்னார் பரப்பங்கண்டல், வேப்பங்குளம் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஆறுபேர் உயிரிழந்தனர் என்றும் தமது தரப்பில் எவ்வித இழப்புகளும் இல்லை என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.(சி)

### ராஜித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்கிழமை இரவு 10 மணியளவில் எரிக்சொல்ஹெய்முக்கும் இலங்கைத் தூதுக்குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற இந்தப் பேச்சுகள் சுமார் இரண்டரை மணித்தியாலம் நீடித்ததாகத் அறியப்படுகிறது.

இந்தப் பேச்களின்போது நோர்வே வெளிவிவகார அமைச்சரின் தகவல் தொடர்பாளரும் கலந்து கொண்டார் .

இந்தச் சந்திப்பைப் படம்பிடிக்க ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி நோர்வே நாட்டவர் ஒருவர் இலங்கையில் வைத்து காணாமல் போனமை தொடர்பாகவும் இந்த சந்திப்பின்போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாக அந்த இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

**ICT - ICT - ICT -**

For Grade 10 and G.C.E.(O/L)

முற்றுமுழுதான Practicals வசதிகளுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம். பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு T.P 0602216083 By:Kumaran-B.Sc.

### உணவுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது. வருடத்தில் உக்கிர உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் 14 நாடுகளில் இலங்கையும் ஒன்று என ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது. செனகல், நைஜீரியா, சோமாலியா, சூடான், உகண்டா, எதியோப்பியா, மொசம்பக், பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், தஜுகிஸ்தான், ஆர்மானியா, ஹெய்ட்டி ஆகிய நாடுகள் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள ஏனைய நாடுகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இலங்கையின் அரிசி விலை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் மக்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் இணை நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

### ஜோன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செனிவிரட்ன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடா பதவிக்காக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியான போதிலும் இதற்கு முன்னர் அவர் அவைத் தலைவராக கடமையாற்றியுள்ளதால் அதன்னைவிட குறைந்த பதவியான பிரதம கொறடா பதவியை ஏற்றுக்கொள்ள இணக்கம் தெரிவிக்கவில்லையென கூறப்படுகிறது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக ஜனாதிபதியின் சகோதரர் பஸில் ராஜபக்ஷவை நியமிக்குமாறு மேர்வின் சில்வா, டிலான் பெரேரா, மஹிந்தாநந்த அளுத்கமகே, ஜகத் புஸ்பகுமர ஆகியோர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ஜனாதிபதி ஜோன் செனிவிரத்னவை நியமிப்பதற்கே விருப்பம் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

### கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியின் மேற்குப் பகுதி மற்றும் வடமேற்கு மன்னார் பகுதிகளில் இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் கடும் மோதலில் ஈடுபட்டுள்ள தற்போதைய நிலையில் வடபகுதிக்கு இடைக்கால ஆலோசனைச்சபையை அமைக்கும் அரசின் அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1987 இந்திய - இலங்கை உடன்படிக்கையைத் தொடர்ந்து இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்கள் உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் கடந்த வருடம் பிரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(சி)

### பிரியங்காவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரியங்காவும் நளினியிடம் கூறவுமில்லை.

தனது தாயார் சோனியா காந்திக்கு நளினி அனுப்பிய கடிதங்களையும் தந்திகளையும் தாம் பார்த்தார் என்றும் இவை குறித்த தமது கருத்துக்களையும் பிரியங்கா இவ்வேளையில் நினைவுகூர்ந்துள்ளார்.

சொந்த விருப்பிலேயே பார்க்க வந்தேன்

உம்மைப் பார்க்கச் சொல்லி என்னை யாரும் அனுப்பவில்லை. எனது சொந்த விருப்பத்தின் பேரிலேயே உம்மைப் பார்க்க வந்தேன் என்றும் இச்சந்திப்புக் குறித்து பிரியங்கா கூறியுள்ளார்.

பாதுகாப்புக் கருதி இருவரும் எந்தப் பொருள்களையும் கொடுப்பதற்கும் பெறுவதற்கும் சிறைச்சாலை நிர்வாகம் அனுமதி அளிக்கவில்லை. இந்நிலையில் பிரியங்கா கொண்டுவந்த தண்ணீரை மட்டுமே இருவரும் பருகியுள்ளனர்.

இதேவேளை இச்சந்திப்பில் பிரியங்கா கேட்ட கேள்விகளைப் பார்க்கும்போது விடுதலைப் புலிகள் தான் ராஜீவ் காந்தி கொலையைப் புரிந்திருப்பார்களா என்ற சந்தேகம் அவர் மனதில் இருப்பதாகவே தெரிகிறது என்றும் -

வேறு சில சக்திகள் புலிகளின் பெயரில் இப்படுகொலையைச் செய்திருக்கலாம் என்ற சிந்தனையும் அவர் மனதில் இருப்பதாகத் தெரிகிறது என்றும் நளினி கூறினார் - வழக்கறிஞர் துரைசாமி சொன்னார்.

### எரிபொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாபனம் 1.856 மில்லியன் ரூபா நஷ்டத்தைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்கப்படும் ஒவ்வொரு லீற்றர் பெற்றோலுக்கு 31 ரூபா நஷ்டத்தைச் சந்தித்ததாக அமைச்சர் குறிப்பிட்டதாக இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

### உச்சாணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணெய் விலை ஏற்றம் காரணமாக உலகின் பல நாடுகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளன. அவற்றில் ஐரோப்பிய ஒன்றிய த்தின் நாடுகள் பலவும் உள்ளடங்கும். (அ-1)

### உள்ளூர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக நிர்ணயிக்கப்பட்ட அதி உச்ச விலைகளின் விவரங்கள் வருமாறு:-

ஒருகிலோ சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 70 ரூபா ஆகும். நாட்டரிசிக்கு 65 ரூபாவும், சிவப்பு அரிசிக்கு 65 ரூபாவும் வெள்ளை அரிசிக்கு 55 ரூபாவும் கட்டுப்பாட்டு விலைகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

மொத்த விற்பனை விலை மட்டங்களாக ஒருகிலோ சம்பா - ரூபா 63, நாட்டரிசி - ரூபா 58, சிவப்பு அரிசி - ரூபா 58, வெள்ளை அரிசி - ரூபா 48 ஆகவும் இருக்கும்.

விவசாயம், உணவு விநியோகம் மற்றும் வர்த்தத்துறை அமைச்சர்களுடன் நேற்றுப் பேச்சு நடத்தியதை அடுத்து புதிய விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

அரிசி விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது குறித்து நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டது.

விவசாய, வர்த்தக, நிதி, பாதுகாப்பு, தேசிய நிர்மாணம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர்களும் செயலாளர்களும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நிர்ணயிக்கப்பட்ட விலை மட்டங்களுக்கு மேலாக அரிசி விற்பனை செய்யும் வர்ததகர்கள் குறித்து அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரிசியை விற்பனை செய்யாத வர்த்தகர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரித்துள்ளார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.